விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 15 வியாழக்கிழமை (29.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 192

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## ஆயுத முனையில் நேற்று வர்த்தகரிடம் கொள்ளை

### பன்னிரண்டரை இலட்சம் பறிபோனது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கஸ்தூரியார் வீதியில் வைத்து வர்த்தகர் ஒருவருடைய 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பட்டப்பகலில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கே.கே.எஸ்.வீதியில் உள்ள கிரைண்டிங் மில்ஸ் அன்ட் ஸ்ரோரின் உரிமையாளரான அப்பாஸ் அப்தெ அலிம் என்பவரிடம் இருந்தே இப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் உள்ள வர்த்தக வங்கியில் குறிப்பிட்ட தொகைப்பணத்தை வைப்புச் செய்வதற்காக கொண்டு சென்ற அவர் பணிப் புறக்கணிப்பின் காரணமாக வங்கி மூடப்பட்டிருந்ததால் அதனை வைப்புச்செய்ய முடியவில்லை.

இதனையடுத்து அவர் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கஸ்தூரியார் வீதியும் நாவலர் வீதியும் இணையும் சந்தியில் வைத்து துப்பாக்கி முனையில் அவர் பணத்தை அபகரித்துச்சென்றதாகவும்,

அவர்கள் தலைக்கவசம் அணிந்திருந்ததால் அடையாளம் காணமுடியவில்லையெனவும் தெரிவித்தார். இச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (து-133)

## மூன்று தமிழ் இளைஞர்கள் மட்டு.வில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இனந்தெரியாதோரால் மூன்று தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மயிலம்பாவெளியில் உள்ள அவர்களது வீடுகளுக்கு மூவரும் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் திரும்பிக்கொண்டிருந்தபோது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு -திருகோணமலை வீதியில் உள்ள மயிலம்பாவெளியில் இராணுவ முகாமில் இருந்து 250 மீற்றர் தொலைவில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் மூன்று இளைஞர்களையும் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இளைஞர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள்கள் கொளுத்தப்பட்டுள்ளன. இதன்போது அவர்களது சடலங்களும் ஒரு பகுதி எரிந்த நிலையில் காணப்படுவதாக தெரியவருகிறது.

கேகாலை புவத்தகெவிட்டியாவை சேர்ந்த சின்னையா மகேஷ் வசந்தகுமார் (வயது 26) மயிலம்பாவெளி விபுலானந்தபுரத்தைச் சேர்ந்த நவரட்ணம் அருணகிரி (வயது 22) மற்றும் விபுலானந்த புரத்தில் தற்காலிகமாக வசித்து வந்த முத்து குமரகுருபரன் கிருஷ்ணகுமார் (வயது 21) ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டோர் என அடையாளம் காணப்பட்டது.

சுட்டுக்கொல்லப்பட்டோர் அனைவரும் கட்டடத்தொழிலாளியாக பணியாற்றியவர்கள் ஆவர். (ச-5)

# புத்தளம்-கற்பிட்டி கடற்பரப்பில் கடற்படை-கடற்புலிகள் கடும் சமர்

## 5 கடற்படையினர் பலி

(கிளிநொச்சி)

**புத்தளம் - கற்பிட்டிக் கடற்பரப்பில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையே நேற்று கடும் சமர் நடைபெற்றது. நேற்று நண்பகல் 11.15 முதல் சுமார் ஒரு மணி நேரம் இச் சமர் நடைபெற்றதாக இரு தரப்பினரும் தெரிவித்துள்ளனர்.**

**இச் சமரில் 5 கடற்படையினர் உயிரிழந்தனர். தமது தரப்பில் ஒருவர் வீரச்சாவடைந்த்தாக விடுதலைப்புலிகளின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.**

**இருதரப்பினரதும் படகுகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.** **(10 ஆம் பக்கம் பார்க்க)**

## தமிழர்களுக்காக பாடுபடும் உணர்வு அதிகமாகவே உள்ளது-விஜயகாந்த்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் அமைதியாக வாழ அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டுமென்று தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவர் நடிகர் விஜயகாந்த் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் நேற்று ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது , இலங்கையில் வாழும் தமிழர்கள் அமைதியாக வாழவேண்டும். அதற்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அத்தனை உதவிகளையும் செய்யவேண்டும்.

ஈழத்தமிழர்களுக்காக பாடுபடும் உணர்வு எங்களிடம் அதிகமாகவே உண்டு. ஈழத்தமிழர்கள் படும் துன்பத்தை நினைத்துத்தான் எனது பிறந்தநாளையே (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதியில் கிளைமோர் மூன்று பொதுமக்கள் மரணம்

(மன்னார்)

மன்னாரில் விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதியான முசலியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர்த்தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

முசலி, கொக்குப்படையான் பகுதியில் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் மணல் ஏற்றிக்கொண்டு திரும்பிய உழவு இயந்திரம் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. குடும்பஸ்தரான சா.யக்கோவு (வயது 51) சுதாகர் (வயது 22) ,செபமாலை சுரேஷ் (வயது 29) ஆகியோர் இச் சம்பவத்தில் கொல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் 160 பேர் காணாமல் போயுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல்போனோர் எண்ணிக்கை 160 என மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது. கடந்த டிசம்பர் மாதம் முதல் இராணுவத்தினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது கைதுசெய்யப்பட்டோர் தடுத்துவைக்கப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ளனர் என்று நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைய அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜுன் 21 முதல் 23 வரை காணாமல் போனோர் தொடர்பான மூன்று முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் யாழ்.அலுவலகம் தெரிவித்துள்ளது. பருத்தித்துறை நகர சபை பணியாளர் சுப்பிரமணியம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் தீவிர வீதிச்சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் நேற்று மதியம் திடீர் திடீரென வீதிச்சோதனைகள் மேற்கொள் ளப்பட்டன. கன்னாதிட்டி வீதி, வேம்படிச் சந்தி, நாவலர் வீதி மற்றும் யாழ்.நகரப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள், யுவதிகள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் மோட்டார் சைக்கிளின் பாகங்கள் கழற்றப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை கடைகளில் பணியில் இருந்த, பொருள் கொள்வனவுக்காகச் சென்றிருந்த இளைஞர்களை வெளியே அழைத்த இராணுவத்தினர் அவர்களின் உடல் பரிசோதனைக்கு உட்படுத்தினர். (து-133)

## கொழும்புப் பாடசாலைகளில் குண்டுப்புரளியால் பரபரப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பாடசாலைகளில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக நேற்றுக்காலை வதந்தி பரவியதால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. வதந்தியால் பீதியடைந்த பெற்றோர் காலை முதல் பாடசாலைக்குச் சென்று தமது பிள்ளைகளை அழைத்துச் சென்றனர்.

உடனடியாக குண்டு செயலிழக்கும் பிரிவினர் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் குண்டு எதுவும் எடுக்கப்படவில்லை.

கொழும்பில் உள்ள பாடசாலைகள் மட்டுமன்றி கண்டியில் உள்ள பாடசாலைகளிலும் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


# உலகக் கிண்ண உதைபந்தாட்டம்
# ஜேர்மனி 2006

## கானாவை வென்று பிரேசிலின் வெற்றிநடை தொடர்கிறது

கானாவை 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற பிரேசிலின் வெற்றிநடை தொடர்கிறது.

நேற்றுமுன்தினம் டார்ட்மன்டில் நடந்த நொக்- அவுட் முறையிலான இரண்டாம் சுற்றுப் போட்டியில் ஐந்துமுறை சம்பியன் பிரேசில் அணி அறிமுக கானாவை சந்தித்தது. பிரேசில் மோதும் போட்டி என்பதால் உலக ரசிகர்கள் நொடிக்கு நொடி பரபரப்பை எதிர் பார்த்தனர். இதற்கேற்ப போட்டி ஆரம்பமாவதற்கு விசில் ஊதிய முதல் நிமிடத்திலேயே பிரேசிலின் நட்சத்திர வீரரான ரொனால்டோ கானா பகுதிக்குள் புகுந்தார். ஆனால் ஓவ்-சைட் என அறிவிக்க ஒருவழியாக கானா தப்பியது.

5ஆவது நிமிடத்தில் அடுத்த தாக்குதல். இம் முறை காக்கா, ரொனால்டோ கூட்டணி கலக்கி யது. காக்கா கொடு த்த பாஸ் மூலம்




ரொனால்டோ அழகான கோல் அடிக்க பிரேசில் 1-0 என்ற முன்னிலை பெற்றது. 29 ஆவது நிமிடத்தில் ரொனால்டினோவுக்கு அருமையான வாய்ப்பு. ஆனால் கானா கோல் கீப்பர் ரிச்சார்ட்டு கிங்சன் துடிப்பாக தடுக்க வாய்ப்பு நழுவியது. 37ஆவது நிமிடத்தில் கிடைத்த பிறி-கிக் வாய்ப்பையும் ரொனால்டினோ வீணாக்கினார். ஆபிரிக்க கண்டத்தின் பிரேசில் என அழைக்கப்படும்



கானா அணி துடிப்பான ஆட்டத்தால் பிரேசிலையே அசர வைத்தது. 42ஆவது நிமிடத்தில் இந்த அணியின் ஜான் மென்சா தலையால் முட்டிய பந்தை பிரேசில் கோல்கீப்பர் திடா சாமர்த்தியமாக காலால் தடுத்தார். இதே போல் மத்யூ அமாவோ, எரிக் அடோ போன்றவர்கள் பிரேசிலின் தற்காப்பு பகுதியை மிக எளிதாகத் தகர்த்தனர். ஆனாலும் பினிஷிங் திறன் இல்லாததால் கோல் வாய்ப்புக்களை கோட்டை விட்டனர்.

முதல் பாதி முடிவுறும் நேரத்தில் பிரேசில் அணித்தலைவர் கபு பந்தை கிராஸ் செய்ய அதைப் பெற்ற ஆட்ரியானோ (46 ஆவது நிமிடம்) அப்படியே அடித்து கோல் ஆக்கினார். ஆனால் டிவி ரீப்ளேயில் இது ஓப்-சைட் கோல் என்பது தெளிவாக தெரிந்தது. கானா வீரர்கள் நடுவருடன் நீண்டநேரம் வாதாடியும் பலன் கிடைக்கவில்லை. முதல் பாதி முடிவில் பிரேசில் 2-0 என்ற வலுவான முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியிலும் பிரேசில் ஆதிக்கம்தான். 56ஆவது நிமிடத்தில் ரொனால்டினோ கொடுத்த பாசைப் பெற்ற ரொபர்ட்டோ கார்லஸ் வாய்ப்பை நழுவவிட்டார். 60ஆவது நிமிடத்தில் ஆட்ரியோனோவுக்கு பதிலாக மாற்று வீரராக ஜுனின்ஹோ களமிறக்கப்பட்டார். முரட்டு ஆட்டம் ஆடிய கானாவுக்கு 80ஆவது நிமிடத்தில் பேரிடி. இந்த அணியின் அசமோவா கியான் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதையடுத்து 10பேருடன் விளையாட வேண்டிய பரிதாப நிலைமைக்கு கானா தள்ளப்பட்டது. ஆட்டத்தின் 84 ஆவது நிமிடத்தில் பிரேசிலின் ஜோஸ்சி ராபர்டோ கானாவின் தற்காப்பு வீரர்களை எல்லாம் கடந்து கோல் கீப்பர் ரிச்சார்ட்டு கிங்சனை தாண்டிச் சென்று தனி ஆளாக அற்புத கோல் அடித்தார். இறுதி



யில் பிரேசில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் கானாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. இந்த வெற்றியை பிரேசில் ரசிகர்கள் வழக்கம் போல் பாரம்பரிய சம்பா நடனம் ஆடி உற்சாகமாகக் கொண்டாடினர். ஆட்டம் ஆரம்பமாகி ஐந்தாவது நிமிடத்தில் உலக சாதனை படைத்தார் பிரேசில் நட்சத்திரம் ரொனால்டோ.

காக்கா பந்தை பாஸ் செய்ய அதைப்



பெற்ற ரொனால்டோ தனி ஆளாக மின்னல் வேகத்தில் பறந்தார். இடையில் மறித்த கானா வீரர்களுக்கு தண்ணி காட்டி அப்படியே கானா கோல்கீப்பர் ரிச்சார்ட் கிங்சனையும் மடக்கி வலது காலால் அருமையான கோல் அடித்தார். இதன்மூலம் உலக கோப்வை வரலாற்றில் அதிக கோல் அடித்தவர் என்ற புதிய உலக சாதனை படைத்தார். இவர் ஜேர்மனியின் ஜெர்ட் முல்லரின் சாதனையை (14கோல்) முறியடித்தார்.

தற்போது ரொனால்டோ மொத்தம் 15 கோல்அடித்துள்ளார். இத்தொடரில் மட்டும் இதுவரை 3கோல் அடித்துள்ளார். நேற்று முன்தினம் உலககோப்பை போட்டிகளில் தொடர்ந்து தனது 11ஆவது வெற்றியை பிரேசில் பதிவு செய்தது. இந்த அணி கடைசியாக 1998 இல் நடந்த இறுதிப் போட் டியில் பிரான்சிடம் தோற்றது. அதற்குப் பிறகு பிரேசிலின் வெற்றி நடை தோல்வியின்றி தொடர்கிறது.

## ஜிடேனின் மாயாஜாலம் ஸ்பெயினை வீழ்த்திய பிரான்ஸ் பிரேசிலுடன் மோத காலிறுதிக்கு முன்னேறியது

அணித்தலைவர் ஜிடேன் மாயாஜாலம் காட்ட பிரான்ஸ் அணி ஸ்பெயினை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. மிகவும் எதிர்பார்க்கப்பட்டும் காலிறுதியில் பிரான்ஸ் அணி பிரேசிலுடன் மோதுகிறது.



நேற்றுமுன்தினம் ஹனோவரில் நடந்த நொக்- அவுட் முறையிலான இரண்டாம் சுற்று போட்டியில் முன்னாள் சம்பியன் பிரான்ஸ் ஸ்பெயின் அணிகள் மோதின. ஒரு போட்டி தடைக்குப் பிறகு பிரான்ஸ் அணியில் மீண்டும் ஜிடேன் இடம்பெற்றார். ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் பிரான்சின் நட்சத்திர வீரரான ஹென்ரி அருமையான சொட் அடித்தார். ஆனால் ஸ்பெயின் கோல் கீப்பர் இகர் கேசிலாஸ் துடிப்பாக தடுத்துவிட வாய்ப்பு நழுவியது. ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் லினியன் துர்ராம் ஸ்பெயினின் பாப்லோ இவானசை பொனால்டி ஏரியாவில் வைத்து முரட்டுத்தனமாகத் தள்ளிவிட்டார் இதைப் பார்த்த நடுவர் ராபர்டோ ரோசட்டி உடனடியாக ஸ்பெயினின் அணிக்கு பெனால்டி வாய்ப்பு வழங்கினார். இப்போது பந்தை அடிக்க வருகிறார் ஸ்பெயினின் டேவிட் வில்லா. எதிரே பிரான்ஸின் அபைவ கோல் கீப்பர் பார்க்காஸ் அதிவேகமாக வந்த பந்து பார்த்தாஸைக் கடந்து கோல் வலைக்குள் புகுந்துவிட ஸ்பெயின் 1-0 என்ற முன்னிலை பெற்றது. இது இத்தொடரில் வில்லாவிற்கு மூன்றாவது கோலாக அமைந்தது. இதற்கு41 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணி பதிலடி கொடுத்தது. இம்முறை பிராங்ரிபரி பந்தோடு மின்னல் வேகத்தில் ஓடிவந்து ஸ்பெயினின் கோல் கீப்பர் இகர் கேசிலாசை கடந்து இலகுவாக கோல் அடித்தார்.

இதையடுத்து முதல் பாதி முடிவில் ஆட்டம் 1-1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியது. இரண்டாவது பாதியில் கோல் அடிக்க பிரான்ஸ் அவசரம் காட்டியது. 83ஆதுவ நிமிடத்தில் அந்த அணியின் தலைவர் ஜிடேன் பிறி-கிக் மூலம் அடித்த பந்தை பாட்ரிக் வியரா அப்படியே தலையால் முட்டி அழகான கோலாக மாற்ற பிரான்ஸ் 2-0 என்ற முன்னிலை பெற்றது. போட்டி நிறைவடையும் நேரத்தில் மீண்டும் மிரட்டினார் ஜிடேன். தனி ஆளாக பந்தைக் கொண்டு சென்ற இவர் கிபிர் வேகத்



தில் கோலடிக்க 92ஆவது நிமிடம் பிரான்ஸ் அணி ஸ்பெயினை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. போராடிய ஸ்பெயின் தொடரிலிருந்து வெளியேறியது.

## உலகக் கோப்பை வரலாற்றில் பிரேசில் நட்சத்திரம் ரொனால்டோ அதிக கோல் போட்டு சாதனை படைத்தார்

பிரேசில் அணியின் நட்சத் திர வீரர்களில் ஒருவர் ரொனா ல்டோ. 1998 ஆம் ஆண்டு முதல் முறையாக உலகக் கோப்பைப் போட்டியில் களம் கண்ட ரொனா ல்டோ.

அந்தத் தொடரில் நான்கு கோல்கள், அதற்கு அடுத்து நடந்த 2002 உலக கோப்பை போட்டியில் எட்டுக் கோல்கள் என மொத் தம் 12 கோல்கள் அடித்து இருந்தார்.

எனவே உலகக் கோப்பையில் அதிக கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ள ஜேர்மனி வீரர் ஜெர்ட் முல்லரின்



**அமிர்தன்**

(14 கோல்கள்) உலக சாத னையை ரொனால்டோ இந்த உலகக் கோப்பையில் தகர் தெறிவார்என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இந்த உலகக் கோப்பையின் ஆரம்ப லீக் ஆட்டங்களில் மந்தமாக ஆடியதால் ரொனால்டொ உலக சாதனை படைப்பது கேள்விக் குறியாகிவிட்டது.

ஆனாலும் சிங்கமாய் சிலிர்த்தெழுந்த ரொனால்டோ யப்பானுக்கு எதிராக நடந்த லீக் ஆட்டத்தில் மீண்டும் விசுவரூபம் எடுத்து அற்புதமாக ஆடினார். அந்த ஆட்டத்தில் அவர் இரண்டு கோல்களை அடித்து அணி யின் வெற்றிக்கு பெரிதும் உதவினார்.

யப்பானுக்கு எதிரான ஆட்டத்தில் இரண்டு கோல்கள் அடித்தன் மூலம் உலகக் கோப் பைப் போட்டிகளில் மொத்தம் 14 கோல்கள் அடித்து முல்லரின் உலக சாதனையை சமன் செய்தார் ரொனால்டோ.

எனவே கானாவுக்கு எதிரான நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் அவர் அதிக கோல்களை அடித்து உலக சாதனை படைப் பார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

எதிர்பார்த்தது போல் கானாவுக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் அவர் ஐந்தாவதுநிமிடத்தில் அற்புதமாகக் கோல் அடித்தார்.

இதன் மூலம் உலகக் கோப்பை உதை பந்தாட்டத் தொடர்களில் மொத்தம் 15 கோல்கள் அடித்து ரொனால்டோ புதிய உலக சாதனை படைத்தார்.

# வன்முறைகளுக்கு அஞ்சி அபி.பணிகளை அரசு இடைநிறுத்தாது - ஜனாதிபதி

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் வன்முறைகளால் ஸ்தம்பிதம் அடைவதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியை சீர்குலைத்து பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்வதே விடுதலைப்புலிகளின் நோக்கம். எது எவ்வாறாயினும் பொது மக்களின் நலன்கருதி நாட்டின் அபிவிருத்தியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் கடமையாகுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற லங்கா அபிவிருத்தி வங்கியின் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்கையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், லங்கா அபிவிருத்தி வங்கியானது பாரம் பரிய வங்கி முறைகளிலிருந்து விடுபட்டு புதியதொரு பாதையில் இயங்க வேண்டும். சிறிய முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும், சாதாரண வர்த்தகர்களை சர்வதேச மட்டத்திற்கு இட்டுச் செல்வதற்கும் இந்த வங்கி உறுதுணையாக இருக்குமென நான் நம்புகின்றேன்.

இதற்காக கிராமிய மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும். குறைந்த பட்சம் ஒரு மாவட்டத்தில் 5 கைத்தொழில் முயற்சியாளர்களையாவது கட்டியெழுப்புவது லங்கா புத்திர அபிவிருத்தி வங்கியின் குறிக்கோளாக அமைய வேண்டும்.

இதனைத் தவிர இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுடன் ஏற்படுத்திக்கொள்ளப்படும் வர்த்தக உடன்படிக்கை மூலம் முதலீடுகளை கொண்டுவருவதற்கும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் அங்கு முதலீடு செய்வதற்கு இந்த வங்கி வழிகாட்டியாக அமைய வேண்டுமென ஜனாதிபதி மேலும் வலியுறுத்தியுள்ளார். (க-9)

# பரமி குலதுங்க கொலை

## சந்தேகத்தில் 22 பேர் கைது!

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவின் கொலைத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் போது சந்தேகத்தின் பேரில் 22 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட உந்துருளி பதிவு செய்யப்பட்டிருக்கும் நபரும் கைது செய்யப்பட்டவர்களுள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. உந்துருளியை சில மாதங்களுக்கு முன்னர் விற்பனை செய்து விட்டதாகவும் அது தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சந்தேக நபர் கூறியுள்ளார்.

இந்த தாக்குதல் திட்டம் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு இந்த நபரிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் உதவியாக அமையலாம் என பொலிஸார் நம்புகின்றனர். விசாரணைக்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இந்த நபர் கூறுவது உண்மையா இல்லையா என்பது பற்றி பொலிஸாரால் உடனடியாக உறுதி செய்ய முடியாதுள்ளது.

உந்துருளியைபதிவுசெய்துள்ள நபரிடமிருந்து அதனை விலை கொடுத்து வாங்கிய நபர் இது வரை கைதுசெய்யப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது. சம்பவ தினம் மேஜர் ஜெனரல் குலதுங்க தனது வீட்டிலிருந்து வழமையான நேரத்தைவிட முன்கூட்டியே வெளியேறியுள்ளார். இதனை தாக்குதலாளி அறிந்து வைத்துள்ளதாக இராணுவ விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் மாற்று வழிகளில் பயணித்து வந்துள்ளார். அதனையும் தற்கொலைதாரி அறிந்துவைத்துள்ளார் என்றும் இராணுவ விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவைக் கொலைசெய்தது போன்று மேலும் பல தாக்குதல்களை நடத்த விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளதாகவும் அவர்களினால் இலக்கு வைக்கப்படுவோர் பட்டியலில் உயரதிகாரிகளின் பெயர்கள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

## பண்ணிசை வகுப்பு ஆரம்பம்

இந்துகலாசார திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலைகள் தோறும் நடாத்திவரும் பண்ணிசை வகுப்புக்கள் வரிசையில் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலையில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புதிதாக வகுப்புக்களில் சேர விரும்புவோரும் மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலை அதி பரிடம் உங்கள் பெயர்களை பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## திருவாசகம் முற்றோதல்

மாதகல் விபுலானந்தர் வீதியில் உள்ள செட்டி கேணியடி ஞான வைரவர் ஆலயத்தில் மாணிக்க வாசகர் குரு பூசை தினத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக் கிழமை காலை முதல் திருவாசகம் முற்றோதல் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் பங்குபற்றவிரும்புபவர்கள் நேரகாலத்துடன் வந்து பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## மதிப்பீடு

யுனிசெப் அனுசரணை யுடன் தென்மராட்சி கல்வி வலயத்தில் அமுல்படுத்தப்பட்ட 'இழந்த கல்வியை மீட்டல்' 3ஆம் செயல் திட்டத்தின் கீழ் தரம்–10 மாண வர்களுக்கான கணிதபாட மதிப்பீட்டையும், தரம் 6–முதல் தரம் 9 மாணவர்களுக்கான கணிதம் மற்றும் தமிழ் மொழி பாட மதிப்பீட்டையும் நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த அறிவுறுத்தல் சகல பாடசாலை அதிபர்களுக்கும் தென்மராட்சிவலயக் கல்விப் பணிப்பாளரால் விடுக்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகளை குறித்த தினத்தில் நடத்தி அதன் புள்ளிவிபரங்களை 5ஆம் திகதிக்கு முன்னர்வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவில் சமர்ப்பிக்குமாறும் அந்த அறிவுறுத்தலில் கேட்கப்பட்டுள்ளது. (க-29)

# கப்பம் பெற்றுவந்த 4 இளைஞர்கள் கைது

மகியங்கனை நகர் வர்த்தகர்களிடம் தொடர்ச்சியாக கப்பம் பெற்றுவந்த நான்கு இளைஞர்களை மகியங்கனை பொலிஸ் பொறுப்பதிகாரி கயங்க மாரப்பன தலைமையிலான குழுவினர் கைது செய்துள்ளனர்.

மகியங்க்னை நகர வர்த்தகர்கள் சிலர் மகியங்கனை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம்செய்த முறைப்பாட்டினை யடுத்தே இவர்கள் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஆரம்ப பொலிஸ் விசாரணைகளுக்குப்படுத்தப்பட்ட போது நீண்ட காலமாகவே கப்பம் பெறும் செயற்பாடுகளை இவர்கள் முன்னெடுத்துவந்திருப்பதாயும் அமைப்பு ரீதியில் இயங்கும் இக் கப்பம் பெறும் கோஷ்டியில் மேலும் பலர் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இது குறித்து மகியங்கனைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-7)

# பயிலுநர் ஆசிரியர்களின் கொடுப்பனவை அதிகரிக்குக!

## தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளில் பயிலும் பயிலுனர் ஆசிரியர்களின் மாதாந்த கொடுப்பனவை அதிகரிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சைக் கோரியுள்ளது.

தொழில் சார்ந்த ஏனைய பயிற்சிகளுக்கு உதாரணமாக தாதியர் தொழில்சார் பயிற்சிக்கு மாதாந்தம் 12ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுவரும் போது ஆசிரியர் தொழில்சார் பயிற்சிகளுக்கு ஆயிரத்து 500 ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருவது பாரபட்சமான நடவடிக்கையாகும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த ஏற்றத்தாழ்வு சம்பளத்தை மட்டுமல்ல ஆசிரிய பயிலுனர்களின் அந்தஸ்தைக் குறைப்பதுடன் தாழ்வு மனப்பான்மையையும் ஏற்படுத்தக் கூடியது. இதனை கல்வி அமைச்சருக்கு விளக்கிய போது கொடுப்பனவை அதிகரிப்பதாக உறுதியளித்திருந்தார்.

எனினும் இதுவரை அது நடைமுறைக்கு வரவில்லை. எனவே கூடிய விரைவில் அதனை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## மணி பல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று நான்காம் திருவிழா

## புந்தியில் பொருந்துகவே!

மனிதரும் தேவரும் மாயா
முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே
கொன்றை வார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும்
பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி
எந்நாளும் பொருந்துகவே!

*அபிராமி அந்தாதி*

## அருள்புரிவாய் ஈஸ்வரியே!

கடலலை தாலாட்டும் நயினையுறை பூரணியே!
நடராஜன் சக்தியுனை நாடுகிறோம் உமையவளே!
திடமான தீர் வொன்று தந்திந்த மண் மீதில்
இடரதனை நீக்கியருள் புரிவாய் புவனேஸ்வரியே!

*நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்*

## காத்திட வருவாய் அம்மா!

எண்ணிலாத் துன்பம் நாங்கள்
இங்குமே படுகின் றோமே
கண்டுமே நீயும் சும்மா
கல்லென இருக்க லாமோ?
மண்ணினை ஆளும் தாயே
மனமது இரங்கி நீயும்
கண்ணினைத் திறந் துபார்ப்பாய்
காத்திட வருவாய் அம்மா!

*கவிஞர் வ.யோகானந்தசிவம்*

## கா என்றே பணிகின்றோம்

சமாதானம் என்றே சாத்தான் வேதம் ஓதும்
நோர்வேயும் 'நோவே' என்றோதும்
கார்மேகம் நீர் குடிக்கும் கடலோரம் நின்று
ஊர் காக்கும் உத்தமியே நாகம்மா
போர் என்று மூண்டுவிட்டால்
போக்கிடம் உன்னையன்றிவேறு ஏதம்மா?
நேராக உன் திருக்கோயில் வந்தடைந்தோம்
கா என்றே உன் கழலடி பணிகின்றோம்!

*நீர்வை ரதி*

## பணியினை யெனக்குத் தாராய்!

மனமெனும் தோணி தன்னில்
மதமெனும் சரக்கையேற்றிச்
சினமெனும் குணத்தைத் தூண்டி
சீறிடும் மனத்தை வெல்ல
குணம்நிறை அடியார் கூட்டம்
கூடியே துதிப்பா பாடும்
பணியினை யெனக்குத் தாராய்
நயினையின் தெய்வத் தாயே!

*கவிமணி கந்த முருகேச தாசனார்*

## சிறுமை போக்க வந்தருள்வாய்!

நித்தம் நடக்கும் நிகழ்வுகளால்
சுருண்டு மடியும் உன் குழந்தை
பித்துப் பிடித்த நிலையினுனைக்
கூவி அழைத்தல் கேளாயோ?
பத்தர் துயரம் தீர்க்க வென
பரிபூரணியே வந்தருள்வாய்
சித்தம் உன் மேல் வைத்தார்கள்
சிறுமை போக்க வந்தருள்வாய்

*ந.கலைச்செல்வி*

## இன்று ஒரு தகவல்

### ஆடையைக் குறைத்த அற்புத நிகழ்ச்சி

1921 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 28ஆம் திகதி மேலமாசி வீதியில் உள்ள ஒரு வீட்டில் நடந்த ஒரு அற்புத நிகழ்ச்சி பின்பு உலக மக்களையெல்லாம் ஆச்சரியப்படவைத்தது. இந்திய வரலாற்றில் அது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. உலக மக்களின் கவனமெல்லாம் காந்திஜியின் பக்கம் திரும்புவதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சி அது.

கதர்த்துணி பிரசாரத்திற்காக காந்திஜி மதுரைக்கு வந்திருந்தார். சென்னை துணி வணிகர் சங்கத்தின் துணைத்தலைவர் ஒருவரின் வீடு மதுரை மேலமாசி வீதியில் இருந்தது. அந்த வீட்டில்தான் காந்திஜி தங்கியிருந்தார். அப்போது வயலுக்குச் செல்லும் உழவர்கள் இடுப்பில் சிறிய துண்டைக் கட்டிக்கொண்டு கலப்பையைத் தூக்கிக்கொண்டு தெருவில் நடந்து போவதைக் கவனித்தார். ஏற்கனவே சேலத்திற்குத் தெற்கே ஆண்களும் பெண்களும் அரைகுறை ஆடைகளுடன் உழைத்துக்கொண்டிருப்பதைக் காந்திஜி கண்ணால் கண்டிருக்கிறார்.

இந்தியரின் சராசரி உடை இவ்வளவுதான்! மனதை என்னவோ செய்திருக்கிறது. இரவு முழுவதும் அதைப் பற்றியே யோசனை. 22.9.1921 வியாழக்கிழமை காலையில் காந்திஜி எழுந்தார். தன்னுடன் தங்கியிருந்தவர்களுக்கு சொன்னார் "இன்று முதல் அரையில் முழு அகலத் துண்டுதான் கட்டுவேன். குளிர் அதிகமாக உள்ள காலங்களில் மட்டும் போர்வை ஒன்றை உபயோகப்படுத்துவேன். மற்றபடி மேலங்கியோ குல்லாவோ எதுவும் போட்டுக்கொள்ளமாட்டேன் தற்காலிகமாக இந்த ஏற்பாட்டை ஒரு மாதத்திற்கு ஏற்றுக் கொள்வேன். அதன்பின் உசிதம் போல் எண்ணிப்பார்த்து முடிவு செய்வேன்" என்றார்.

அவருடைய குரல் உறுதியாக இருந்தது. உடனே செயலில் இறங்கினார். தனது பத்து முழ வேட்டி, மேலங்கி,குல்லா எல்லாவற்றையும் களைந்தார். வேட்டியிலிருந்து நான்கு முழ துணியை எடுத்துக் கொண்டார். வெட்டி எடுத்த துண்டை நீளமாக இரண்டாக மடித்தார். அதை இடுப்பில் துண்டு மாதிரி கட்டிக் கொண்டார். தலையில் சின்ன உச்சிக்குடுமி. அரையில் சிறிய துண்டு. அண்ணல்காந்தி ஆண்டிக் கோலத்தில் காட்சியளித்தார்.

கூட இருந்தவர்களைப் பார்த்து "காரைக்குடிக்குப் புறப்படலாமே" என்றார். அவருடைய நண்பர்களும் சீடர்களும் திகைத்துப் போய் நின்றார்கள். இந்த விரதம் நிரந்தரமாகிவிடுமோ என்ற பயம் அவர்களுக்கு! எப்படியோ இந்த விடயம் ராஜாஜிக்கும் அன்று பிரபலமாக விளங்கிய தேசபக்தர் டாக்டர் சி.செ.சௌராஜனுக்கும் எட்டியது. உடனே இருவரும் ஓடிவந்தார்கள். "வேண்டாமே இந்தக் கோலம்"என்றார்கள்.காந்திஜி தனது முடிவில் உறுதியாக இருந்தார்.

ராஜாஜி எவ்வளவோ வாதிட்டுப் பார்த்தார். "உங்கள் வாதத்திற்கு என்னால் பதில் சொல்ல முடிய வில்லை. இருந்தாலும் நான் செய்வதுதான் சரி என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இன்று அதிகாலை மூன்று மணி இருக்கும். நான் ஓரளவு விழித்துக்கொண்டேன் அதாவது உறக்கமும் விழிப்புமாக இருந்த நிலையில் எனக்கு இந்த எண்ணம் உண்டானது. இது எனது அந்தராத்மாவின் ஆணை! அதை என்னால் மீறமுடியாது" என்று கூறிவிட்டார் காந்திஜி.

கதர் பிரசாரத்திற்காக காரைக்குடிக்குக் கிளம்பினார். வாசலில் நான்கு மோட்டார் வண்டிகள் காத்திருந்தன. வீதியில் இருபுறமும் மக்கள் .காந்திஜி இடுப்புத் துணியுடன் மோட்டார் வண்டியில் ஏறினார். நண்பர்களும் சீடர்களும் மக்களும் உடல் சிலிர்க்க அந்தக் காட்சியைப் பார்த்தார்கள். எப்பேர்ப்பட்ட காட்சி அது.

சொக்கநாதப் பெருமானையே கூலியாளாக்கி மண் சுமக்க வைத்த மதுரை அல்லவா? அந்த மதுரை தான் காந்திஜி துறவிக்கோலம் கொள்வதற்கும் காரணமாக இருந்தது. இது இன்று எத்தனை பேருக்குத் தெரியும்.

ஒருமுறை காந்திஜியும் நேருவும் சுற்றுப்பயணம் செய்தார்கள். ஒரு இடத்தில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். குறுக்கே ஒரு வாய்க்கால். நேரு என்ன செய்தார் தெரியுமா? தனது இளமைத் துடிப்பைக் காட்டுவதற்காக கொஞ்சதூரம் பின்னால் போய் அங்கிருந்து வேகமாக ஓடிவந்து அந்த வாய்க்காலைத் தாண்டினார். காந்திஜி அப்படிச் செய்யவில்லை. பக்கத்தில் இருந்த பாலம் வழியே அந்த வாய்க்காலைக் கடந்து வந்தார்.

நேரு காந்திஜியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே "என்னை மாதிரியே நீங்களும் தாண்டியிருக்கலாமே" என்றார். அதற்கு காந்திஜியும் சிரித்துக் கொண்டே "இரண்டு அடி முன்னேற்றத்திற்காக ஐந்து அடி பின்னால் போவதா" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பாலாவின் பேட்டியை திட்டமிட்டு திரிபுபடுத்திய இந்தியத் தரப்பினர்



(கொழும்பு)

என்.டி.ரி.வி. தொலைக் காட்சிக்கு விடுதலைப்புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அளித்த பேட்டி இந்தியத் தரப்பினால் திட்டமிட்டுத் திரிபுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக மதியுரைஞர் பாலசிங்கம் தெரிவித்த கருத்துக்களை முழுமையாகப் பயன்படுத்தாமல் ஒரு பகுதியை ஒளிபரப்பி அதற்கு வேறு அர்த்தத்தில் விளக்கமும் வியாக்கியானமும் கொடுத்து இந்தியத் தரப்பில் 'திருவிளையாடல்' புரியப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன என தமிழ் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி பேட்டி என்.டி.ரி.வியின் சார்பில் ஜேர்மன் நாட்டில் பணியாற்றும் இந்தியப் பெண் ஒருவரினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலண்டன் புறநகர் பகுதியிலுள்ள அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டில் எடுக்கப்பட்டது.

2002ஆம் ஆண்டு முற்பகுதியில் கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களை சந்தித்த சமயம் ''ராஜீவ்காந்தி கொலை ஒரு துன்பியல் நிகழ்வு ''என்று தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

அதற்கு மேலதிகமாக இது "வரலாற்றில் மறக்க முடியாத ஒரு துன்பிய நிகழ்வு"என்று பாலசிங்கம் தெரிவித்தோடு அந்தச் சம்பவத்துக்காகத் தாம் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிக்கிறார் எனவும் குறிப்பிட்டார் . அது அப்படியே ஒளிபரப்பாகியது.

அதற்கு மேல் "இந்நிகழ்வை ஒரு தனி மனித கொலைச் சம்பவமாக அணுகுவது அல்லது பார்ப்பது தவறு .ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிட்ட அரசியல் வரலாற்றுப் பின் புலத்தின் அடிப்படையில்தான் இச் சம்பவத்தைத் தொடர்பு படுத்தி பார்க்கவேண்டும்'' என்று சாரப்பட அவர் தெரிவித்த கருத்துகள் அப்படியே வெட்டப்பட்டு விட்டன.

அவற்றை ஒதுக்கிவிட்டு ''15 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தடவையாக ராஜீவ்காந்தி கொலைக்கான பொறுப்பை புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதற்காக மன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள்'' என்ற சாரப்பட பாலசிங்கம் கூறாத விடயத்தை ஒரு முன்னறிவிப்பாகக் கொடுத்து பாலசிங்கத்தின் நீண்ட ஒரு மணிநேரப் பேட்டியில் ஓரிரு நிமிட வார்த்தைகளை ஒளிபரப்பி ராஜீவ் கொலைக் குற்றத்தைப் புலிகள் அப்படியே ஏற்றுக்கொண்டனர் என்ற மாயையை உருவாக்கும் விதத்தில் 'திருகுதாளம்' பண்ணி செய்தி வெளியிடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்தியச் செய்தி நிறுவனத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பதிவு செய்யப்பட்ட மேற்படி பேட்டியின் முக்கிய பகுதிகள் புதுடில்லியில் வார்த்தைக்கு வார்த்தை அலசி ஆராயப்பட்ட பின்னர் அதில் சாதகமான பகுதிகளை வெட்டி எடுத்து ஒளிபரப்ப ஏற்பாடுசெய்யப்பட்டதோடு அதற்கு இந்திய அரசுத் தரப்பில் பதிலடி தரவும் ஆயத்தம் செய்யப்பட்டது.

ராஜீவ் கொலை ஒரு வரலாற்றில் மறக்க முடியாத துன்பியல் நிகழ்வு. அதற்காக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம். பழையவற்றை மறந்துவிட்டுப் புதிய அணுகுமுறையில் விடயங்களைக் கையாள இந்தியாவின் சமிக்ஞைகளை எதிர்பார்க்கின்றோம் என்று பாலசிங்கம் கூறிய கருத்துகள் "பதினைந்து ஆண்டுகளின் பின்னர் ராஜீவ் கொலைக்கான பொறுப்பை புலிகள் முதற் தடவையாகப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்கிறார்கள். அதற்காக இந்தியாவினதும் இந்திய மக்களினதும் மன்னிப்பை அவர்கள் கோருகிறார்கள்" என்ற பீடிகை அறிவிப்போடு ஒளிபரப்பியதன் மூலம் இவ் விடயத்தை வேண்டுமென்றே திரிபுபடுத்திக் குழப்பியிருக்கிறது என்.டி.ரி.வி.எனத் தமிழர் தரப்பில் கடுமையான குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகின்றது. (கு)

# ஈழத்தமிழர்களை பாதுகாப்பதற்கு தமிழறிஞர்கள் உண்ணாவிரதம்

ஈழத்தமிழர்களை பாதுகாக்க மத்திய அரசை நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழ்நாடு மனித உரிமைகள்



ஈழத்தமிழர்களை பாதுகாக்க மத்திய அரசை நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழ் நாடு மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் ஊழல் ஒழிப்புச் சங்கம் பன்னாட்டு தமிழுறவு மன்றம் ஆகியவற்றின் சார்பில் சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.இதில் திராவிட சமய நிறுவன தெய்வநாயகம் பேசுவதையும், கவிஞர்கள் மு.மேத்தா, வா.மு.சேதுராமன் மற்றும் தமிழ் அறிஞர்கள் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.

பாதுகாப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு சங்கம் பன்னாட்டு தமிழுறவு மன்றம் சார்பில் சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. உண்ணாவிரதப் போராட்டத்திற்கு கவிஞர் வா. மு.சேதுராமன் தலைமை வகித்தார். போராட்டத்தை கவிஞர் ம.மேத்தா ஆரம்பித்து வைத்தார்.

போராட்டத்தை கவிஞர் மு.மேத்தா ஆரம்பித்து வைத்து பேசுகையில், ஈழத்தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வு நம்மிடம் இல்லை என்றால் உலக அளவில் தமிழர்களை யாரும் மதிக்கமாட்டார்கள் .

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளை தீவிரவாதிகளைப் போல சித்தரித்து பொய் பேசுகிறார். அப்பாவிப்பொதுமக்களை இலங்கை இராணுவம் குண்டு வீசி கொன்று வருகிறது.

இதைத்தான் விடுதலைப்புலிகள் எதிர்க்கிறார்கள். அப்பாவி ஈழத்தமிழர்களை பாதுகாக்க தமிழக முதல்வர் கருணாநிதியும் மத்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இந்நிகழ்வில் சுப.வீரபாண்டியன், அக்பர், நாகஜோதி, தெய்வநாயகம், திருஞானசம் பந்தம் உட்பட பலர் பேசினர்.

மாலையில் பா.ம.க.தலைவர் ஜி.கே.மணி உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்துப் பேசினார். (கு)

# விடுதலைப் புலிகள் வைகோ சந்திப்பு?

## கேரள பத்திரிகைகளில் திடுக்கிடும் செய்தி

(கொல்லம்)

***கேரளாவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ள வைகோ அங்கே விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளை இரகசியமாக சந்தித்ததாக கேரள பத்திரிகைகள் பரபரப்பான தகவல்களை வெளியிட்டுள்ளன.***

ராஷ்டிர தீபிகா என்ற மலையாளப் பத்திரிகை இது பற்றி வெளியிட்டுள்ள பிரதான செய்தியில் கூறியிருப்பதாவது:

இலங்கையில் போர் வலுத்துள்ள நிலையில் கேரளாவிலும் தமிழகத்திலும் புலிகள் ஊடுருவியுள்ளதாக தகவல் வந்துள்ளதைத் தொடர்ந்து கேரள மாநில உளவுத் துறை பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது. கேரளாவில் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளான இடுக்கி, கொல்லம், பாலக்காடு பகுதிகளில் விடுதலைப் புலிகள் இரகசியமாக முகாமிட்டுள்ளதாக தகவல் கள் கிடைத்துள்ளன.

இதைத் தொடர்ந்து கொல்லம் மாவட்டத்தில் கிழக்குப் பகுதியில் உள்ள பிளான்டேஷன் கார்ப்பரேஷன் எஸ்டேட்டில் தங்கியுள்ளவர்களை மாநில உளவுத்துறை தீவிரமாக கண்காணித்து வருகிறது. இதற்கிடையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆயுர் வேத சிகிச்சைக்காக கேரளா வந்து சில நாட்களாக தங்கியுள்ளார்.

கடந்தசனிக்கிழமையன்று அவர் இடுக்கி மாவட்டம் மூணாறில் உள்ள ஹோட்டலில் சில புலிகள் இயக்க பிரமுகர்களுடன் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ள விவரங்கள் உளவுத் துறைக்கு கிடைத் துள்ளது. இந்த விவரங்களை உளவுத் துறைஇரகசியமாக விசாரித்து வருகிறது. வை கோ புலிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளதற் குமுழு ஆதாரங்களும் சேகரிக்கும் பணியில் உளவுத் துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தமிழகத்தில் புலிகள் ஊடுரு வாமல் இருக்க தேவை யான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் மத்திய அரசு அதிகாரிகளுடன் தமிழக முதல்வர் கருணா நிதி பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து அங்கே கெடுபிடி அதிகமான தால் அருகிலுள்ள கேரள பகுதிகளிலும் உளவுத்துறையினர் தீவிர தேடுதல்வேட்டையை நடத்திவருகின்றனர். இந்தப்பகுதியிலுள்ள இலங்கைத் தமிழர்கள் சில ரது வீடுகளில் புலி கள் வந்துதங்கிச் செல்வதாகவும் விவரங்கள் கிடைத்துள்ளது. பிளான்டேஷன்கார்ப்பரேஷன்எஸ்டேட்தொழிலாளிகளுடன் விடுதலைப் புலிகள் சிலர் தங்கியுள்ளதாகவும்தெரியவருகின்றது . இவர்களை கைது செய்து விசாரிக்க இந்திய உளவுத்துறையினர் முடிவு செய்துள்ளனர். (கு)




கேரளாவில் விடுதலைப் புலிகள் –'வைகோ சந்திப்பை தலைப்புச் செய்தியாக வெளியிட் டுள்ள மலையாள பத்திரிகை ராஷ்டிர தீபிகா.

# மாணவர் ஆக்ரோஷத்தால் குழப்பத்தில் முடிந்த கூட்டம்

ஆறுமாத காலப் பயிற்சியின் பின் வேலை வாய்ப்பு, சிங்கப்பூர், லண்டன், அவுஸ்திரேலியா முதலிய வெளிநாடுகளில்கொழுத்த சம்பளத்துடன் வேலை வாய்ப்பு என்றெல்லாம் பொய் வாக்குறுதிகளைக் கூறி மாணவர்களிடம் இருந்து இலட்சக்கணக்கான ரூபா பணத்தைச் சுருட்டிக்கொண்டு சிங்கப்பூருக்கு ஓடிச்செல்ல முயற் சித்த யுனிவாக் கணனிப் பூங்காவின் முகாமையாளர் பாலசுப்பிரமணியம் சுரேஸ்குமார் என்பவர் மீதான பொலிஸ் வழக்கு ஒருபுறமிருக்க மாணவர் பிரச்சினைக்கு தீர்வு காணவென நேற்று முன்தினம் கூட்டப்பட்ட கலந்துரையாடலின் போது அங்கு குழுமிய மாணவர்கள் பெற்றோர்களினால் அக் கல்வி நிலையமே அல்லோல கல்லோலப்பட்டது.

முகாமையாளரின் போலி வார்த்தைகளை நம்பி பலவிதத்திலும் கஷ்டப்பட்டு திரட்டிய பல இலட்சம் ரூபாவை பறிகொடுத்த பெற்றோரின் கண்ணீர்க் கதைகள் கேட்பவர் மனதைக் கரைக்கக்கூடியதாக இருந்தது.

இந்தக் கூட்டத்தைக் கூட்டிய அக் கல்வி நிறுவனத்தின் ஆசிரியரான ரதீபன் கேள்விக் கணைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் இடையில் எழுந்தோடிவிட்டது ஆச்சரியமான அம்சம்.

சுரேஸ்குமாருக்கு பதிலாக நியமிக்கப்பட்டவரான சுதன் என்பவரும் மாணவர்களுடைய கேள்விக்கு முகம் கொடுக்க முடியாமல் வெளியேறியுள்ளார். எனினும் இக் கற்கைநெறி தொடர்ந்து மேற்கொள்ளப்படு மெனவும் அவர் தெரிவித்துள்ளார். (து-133)

# இராணுவ ரீதியான உதவிகள் எதனையும் இலங்கைக்கு இந்தியா வழங்கக்கூடாது

## ராமதாஸ் வேண்டுகோள்

இலங்கைக்கு இந்தியா இராணுவ றேடர்களை வழங்குவ தாக வெளியாகியிருக்கும் தகவலை இந்திய மத்திய அரசின் கூட்டணிக்கட்சியான பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர்ராமதாஸ்கவலை அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தி உண்மையானதாகவிருக்குமானால் இந்திய அரசின் முடிவை தம்மால் ஏற் றுக் கொள்ள முடியாது இருக்கு மென்றும் அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய இராணுவ உதவியை இந்தியா இதுவரை செய்யவில்லையென்றால் இனி மேலும் செய்யக்கூடாது என்றும், இது குறித்த நிலைமையை இந்திய அரசு உடனடியாக தெளிவு படுத்த வேண்டும் என்றும் ராமதாஸ் கோரியுள்ளார்.

இந்தியாவின் இராணுவ தளபாட உதவிகளை இலங்கையில் அரசியல் உரிமைகளுக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் போராடி வருகின்ற தமிழர் களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப் போகின்றது என்பதனை இந்தியா மறுந்துவிடக்கூடாது என்பதனையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பிரச்சினையில் நியாயமான அரசியல் தீர்வு கான இந்தியா உதவ வேண்டும் அது அந்த நாட்டின் உள் விவகாரம் என இந்தியா கருதினால் அந்தப் பிரச்சினையிலிருந்து இந்தியா முழுமையாக விலகிக் கொள்ள வேண்டும். அதை விடுத்து தமிழர்களுக்கு எதிராக உதவும் எத்தகைய இராணுவ உதவிகளையும் அளிப்பது என்பது என்ற முடிவை ஏற்கவே முடியாது என்றும் ராமதாஸ் தெரிவித்துள்ளார். (ச-5)

# சமுர்த்தி துறையில் ஊழல் மோசடிகள்; விசாரணை செய்ய 120பேர் நியமிப்பு!

சமுர்த்தித் துறையின் கீழ் மட்டத்தில் ஊழல், மோசடிகள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படும் முறைபாடுகள் குறித்து விசாரணை செய்து உண்மையை கண்டு பிடிப்பதற்காக 120 பேருக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணை அதிகாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவ் விசாரணை அதகாரிகள் சமுர்த்தி கொடுப்பனவைப் பெறுவோரின் முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்து, துரித நடவடிக்கை எடுப்பரென சமுர்த்தி வறுமைஒழிப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராட்சி தெரிவித்தார்.

சமுர்த்தி அதிகாரிகளாக செயலாற்றவந்த 120 பேருக்கே விசாரணை அதிகாரிகளாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நியமனக் கடிதங்களை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கடந்த திங்கட்கிழமை செத்சிறிபாயவில் வைத்து வழங்கினார்.

சமுர்த்தித் துறையின் கீழ் மட்டத்தில் ஊழல், மோசடிகள் இடம் பெற்றுவருவதாக தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து துரித நடவடிக்கை எடுக்குமுகமாகவே இவ் விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பு, கம்பவிரா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, புத்தளம், அனுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, பதுளை மற்றும் குருநாகல் ஆகிய 14 மாவட்டங்களில் செயலாற்றுவர். (க-7)

# புலிகளின் கராத்தே பயிற்றுவிப்பாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

## சிங்கள நாளிதழ் தகவல்

புலிகள் இயக்கத்தின் பிரதான கராத்தே பயிற்றுவிப்பாளர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் மினுவாங்கொடைப் பொலிஸார் கைது செய்துள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இச் சந்தேகநபர் கொட்டாஞ்சேனை யுவதியொருவரை விவாகம் புரிந்துள்ளதுடன் கட்டுவெல்லேகம யுவதி யொருவருடனும் தொடர்புகள் கொண்டிருந்தாரென விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விமான நிலையத்தின் விமானம் நிறுத்தி வைக்கும் பகுதியருகில் இவர் அடிக்கடி நடமாடித் திரிந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் மூன்று அமெரிக்க டொலருடனும் 13ஆயிரத்து 260ரூபாபணமும் கைத்தொலைபேசி யொன்றும் அவரிடம் இருந்ததாகவும் அவருடன் தொடர்புடைய பதுளை பிரதேச சந்தேக நபர்கள் இருவரும் சிங்கள யுவதி ஒருவரும் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார் இதுகுறித்த மேல் விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றதாக கூறினர் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வு நாளை மாலை 4.30 மணிக்கு சாவற்காடு அறநெறிப் பாடசாலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ''திருவாசகம் என்னும் தேன்'' என்னும் தலைப்பில் சி.சசீபன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர். (க-133)

# இராசி பலன்

**29.06.2006**
**(ஆனி 15, வியாழக்கிழமை)**
**சதுர்த்தி பின்னிரவு 1.48 மணிவரை**
**ஆயிலியம் முன்னிரவு 10.16 மணிவரை**
**இராகுகாலம் 1.26-2.56மணிவரை**
**சுபநேரம் 7.26-8.56 மணிவரை**
**சதுர்த்தி விரதமம்**
**சித்தாமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | தொழில் விருத்தி, புதிய முயற்சி, சுப செலவு, வாக்குமேன்மை. |
| இடபம் | சொத்துக்களால் நன்மை, காரிய நன்மை, உறவினர் உதவி, நற்பெயர். |
| மிதுனம் | கோபப்படுதல், உஷ்ண வியாதி, முயற்சி தாமதம், திடீர் நன்மை. |
| கடகம் | உற்சாகம், ஆழ்ந்தசிந்தை, காரிய தாமதம், தொழில்சிந்தை. |
| சிங்கம் | சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம், தொழில்சிந்தை, திடீர் நன்மை. |
| கன்னி | நல்ல வருமானம், காரிய சித்தி, கலந்துரையாடல், புகழ். |
| துலாம் | அதிக பிரயாசை, பிறர் உதவி, உடல் நலம், காரிய அனுகூலம். |
| விருச்சிகம் | பித்தரோகம், பெரியோர் வெறுப்பு, நிர்ப்பந்த நிலை, முயற்சி தாமதம். |
| தனுசு | கௌரவக்குறைவு, வீண்பகை, காரிய இடையூறு, சிந்தனை மிகுதி. |
| மகரம் | களஸ்திர நன்மை, முயற்சி பலிதம், ஆரோக்கியம், பெருமையடைதல். |
| கும்பம் | பகைவரால் நன்மை, காரிய சித்தி, பொருள் சேர்க்கை, தொழில் விருத்தி. |
| மீனம் | பணக்குறைவு, வேலைச்சுமை, முயற்சி தாமதம், தாழ்ந்த சுபாவம். |

- வளவன்

# சுதேச மருத்துவர்கள் ஆங்கில மருந்துகளை பயன்படுத்த தடை

தமிழர் தாயகப் பகுதிகளில் பாரம் பரிய சுதேச மருத்துவர்கள் ஆங்கில மருந்துகளை பயன்படுத்துவதற்கு தமிழர் சுகாதார திணைக்களம் தடை விதித்துள்ளது. இது தொடர்பாக தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் டாக்டர் ஓவியன் தெரிவிக்கையில்,

பரம்பரை ஆயுள் வேத மருத்துவர்களுக்கு ஆங்கில மருத்துவ அனுமதி வழங்கப்படமாட்டாது. ஆயுள் வேத வைத்திய கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆங்கில மருத்துவ அனுமதி எம்மால் வழங்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா மருத்துவப் பிரிவு அல்லது தமிழீழ மருத்துவ சாலையின் பதிவு இல்லாதவர்கள் 1.7.2006 முதல் மருத்துவம் செய்ய அனுமதிக்கப் படமாட்டாது. 1997ஆம் ஆண்டில் தமிழீழ சுகாதார சேவையினரால் சுதேச மருத்துவ அனுமதி தற்காலிகமாக வழங்கப்பட்டவர்களுக்கு கடந்த 20, 22ஆம் திகதிகளில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளது.

இதில் தகைமையானவர்கள் தொடர்ந்தும் சுதேச மருத்துவத்தை மேற்கொள்ள முடியும் என்றார். (க-7)

# கல்வி முதுமாணிப் பரீட்சையை பிற்போடுமாறு கோரிக்கை

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் கிழக்கு பல்கலைக்கழகத்தினால் எதிர்வரும் முதலாம் திகதி நடத்தப்படவுள்ள கல்வி முதுமாணிப் பரீட்சையை பிறிதொரு தினத்தில் நடத்துமாறு உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத் துப் பிரதேச மதிப்பீட்டு நிலையங்களிலும் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் ஜூலை மாதம் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதனால் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் கல்வி உத்தியோகத்தர்கள் கிழக்கு பல்கலைக்கழகத்தினால் எதிர்வரும் முதலாம் திகதி நடத்தப்படவுள்ள கல்வி முதுமாணி பரீட்சைக்குத் தோற்ற முடியாதநிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கின்றனர். ஆதலால் இப்பரீட்சையை எதிர்வரும் ஜூலை மாதம் 9ஆம் திகதிக்கு பின்னர் பிறிதொரு தினத்தில் நடத்துமாறும் அவர்கள் பல்கலைக்கழக பரீட்சைக்குப் பொறுப்பான அதிகாரிகளை கேட்டுள்ளனர். (க-7)

# இடைநிறுத்தம் செய்யப்பட்ட மாணவி குறித்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

தேசிய கல்வியற்கல்லூரி மாணவியான புன்னாலைகட்டுவனைச் சேர்ந்த தர்மினி கணேசன் என்பவரை நிர்வாகம் இடைநிறுத்தம் செய்தமை தொடர்பாக யாழ்.மனித உரிமைஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாணவியை 2004ஆம் ஆண்டு உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார் என்ற காரணத்தால் இடைநித்தம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவ விசாரணை களுக்காக கடந்த திங்கட்கிழமை சம்பந்தப் பட்ட இருதரப்பினரையும் வருகை தருமாறு மனித உரிமை ஆணைக் குழுவினால் பணிக்கப்பட்ட போதும் பாதிக்கப்பட்ட மாணவியும் பெற்றோரும் மாத்திரமே வருகை தந்துள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி கவலை தெரிவித்துள்ளார். (து-133)


# அருள் மிகு சுன்னாகம் மயிலணி கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்



9 ஆம் நாள் 29.06.2006
(குருந்தமர நிழல் திருவிழா)



## வினையழிப்பாய் பேராளா!

மூன்னைப் பழவினைகள் முழுது மழித்தெம்மை
பின்னைப் பிறவியது பின் தொடரா தாக்கிடுவாய்
பென்னை முகன்தம்பி பேராளன் மயிலணியின்
தென்ன வொலித்திடுஞ் சீர்பதியின் நாயகனே!

இயல்வாணன்


# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

## பிறப்புரிமை பிறழ்வுகள் (Genetic disorders)

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இவ்வாறான பிறழ்வுள்ள சந்ததிகளின் உருவாக்கம் மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு நன்மையற்ற ஒரு விடயமாக இருப்பதால் இவை முளைய நிலையிலேயே அல்லது பிறப்பிற்கு முன்னரான நிலையிலேயே பரிசோதனை ரீதியாக அறியப்பட்டு பின் அவற்றினை அழித்தல் நன்மை பயக்கும். இதற்காக பின்வரும் பரிசோதனை முறைகள் பயன்படுகின்றன.

(படம்- 06)




**01.Amniocentesis முறை:-**

இப்பரிசோதனையில் முளையத்தின் கலங்கள் கருவுற்றிருக்கும் பெண்ணின் கருப்பையினுள் உள்ள அமினியன் பாய்பொருளிலிருந்து உறிஞ்சல் முறை மூலம் பெறப்பட்டு பின் நிறமூர்த்த பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

**02.Chorionic villi மாதிரி பெறல்:-**

இப்பரிசோதனையில் கருப்பையிலுள்ள நுகத்தின் சூல்வித்தகக் கலங்களின் மாதிரி பெறப்பட்டு நிறமூர்த்தப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும். பொதுவாக இச் சோதனை பெண் கருவுற்ற ஆரம்ப நாட்களில் நடாத்தப்படும்.

**03.Laparoscopic முறை:-**

இப்பரிசோதனையில் பெறப்படும் பெண்ணின் ஒரு மடிய முட்டைக்கலம் நிறமூர்த்த மற்றும் உயிர் இரசாயன பகுப்பாய்வுகளிற்கு உட்படுத்தப்படும்.

இவ்வாறான ஆய்வுகூட பரிசோதனைகள் மூலம் பிறப்புரிமை பிறழ்வுகளைக் கண்டறிந்து பரம்பரையலகு அட்டவணை மூலம் உறுதிப்படுத்தி அத்தகைய நுகங்களை அல்லது முளையங்களை அழிக்க முடியும் (Abortion). இப்பிறழ்வுகளை கருக்கட்டலில் உருவான பின்னர் அறிய முயற்சிப்பதிலும் பார்க்க இதன் நிகழ்தகவு அடிப்படையில் முன்னெச்சரிக்கை தவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சிறந்ததாகும்.

பாரம்பரிய தலைமுறையுரிமை உடைய

## விஞ்ஞானத் துளிகள்

பிறழ்வுகள் எதிர்காலச் சந்ததிகளுக்கு கடத்தப்படக்கூடிய நிகழ்தகவுகள் உள்ள சாத்தியமான ஆண், பெண் மனிதர்களுக்கு வழங்கப்படும். விஞ்ஞான ரீதியான ஆலோசனைகள்த பாரம்பரிய அறிவுறுத்தல் (Genetic counseling) என அழைக்கப்படுகின்றது. இதன்மூலம் கருவுறலிகளில் ஏற்படக்கூடிய அடுத்த சந்ததிக்கான பிறழ்வுகள் ஏறத்தாழ முற்றாக ஏற்படா வண்ணம் தடுக்க முடிகிறது.

**01.பரம்பரையலகு அட்டவணைப் படுத்தல்:-**

கருவுறலில் ஈடுபடும் ஆண், பெண் நபர்களின் சன்னிக் கலங்கள் காவிகளாக இருக்கலாம். இவர்களின் பரம்பரை அட்டவணைகளில் இருந்து பிறழ்வுகளின் நிகழ்தகவு அறியப்பட்டு தக்க ஆலோசனை வழங்கப்படலாம்.

**02.நிறமூர்த்தப் பகுப்பாய்வு:-**

பெற்றோர்களின் நிறமூர்த்தங்கள் முற்றாகப் பகுப்பாய்வு செய்யப்படல்.

திரு. யோகராஜா சிவயோகராஜன்
B.Sc. (Hons)

**03.உயிர் இரசாயன பகுப்பாய்வு**

**04.**நெருங்கிய இரத்தத் தொடர்புள்ள உறவினர்களுக்கிடையேயான திருமணங்களை தவிர்த்தல். ஏனெனில் இவர்கள் காவிகளாக இருப்பின் அடுத்த சந்ததிக்கு பிறழ்வுகள்ளக் கடத்தும் நிகழ்தகவு அதிகமாகக் காணப்படும்.

எனவே மனித பரம்பரையலகுகள், அவற்றின் பிறழ்வுகள் பற்றிய பூரண அறிவினையும் ஆலோசனைகளையும் பெற்று சிறப்பான விருத்திக்குரிய சந்ததிகளை இச்சமுதாயத்திற்கு வழங்குவீர்களாக.

(முற்றும்)

# வன்முறைகளைத் தடுக்க உச்சக்கட்ட பாதுகாப்பு!

தமிழீழ விடுதலைப்புலிகளின் வன்முறைச் சம்பவங்களை தடுக்கும் வகையில் நாட்டில் அதி உச்சக்கட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் மீண்டும் அறிவித்துள்ளது.

லெப்டினனன்ட் ஜெனரல் பாரமி குலத்துங்க தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக இந்த நாட்டில் எவ்வாறான பாதுகாப்பு இருந்ததோ, அதைப் போன்றதொரு பாதுகாப்புச் சூழலே இனி தொடரும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேவையேற்படும் போது வீதித் தடைகளையும் சோதனைச் சாவடிகளையும் அமைத்து சோதனைகள் மேற்கொள்ளப்படும். கட்டுப்பாடற்ற இடங்களில் இருந்து கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் பொருட்களும் வாகனங்களும் முழுமையாகப் பரிசோதிக்கப்படும்.

நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வ்ழங்க வேண்டும்.

(க)

# புதிய வெளிநோயாளர் பிரிவு கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டல்

கரவெட்டி பிரதேச அரசினர் வைத்தியசாலையில் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கியின் நிதியுதவியுடன் புதிய வெளிநோயாளர் பிரிவு கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

சுமார் 61 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் மேற்படி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அடிக்கல்லை நாட்டுவார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகநேசனும் கலந்துகொள்ளவுள்ளார்.

மேற்படி கட்டடம் அமைப்பதற்கான புதிய காணியினை வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினர் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

(க-101)

# கட்டடத் தொகுதி திறப்பு

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் புதிய கட்டடத் தொகுதி கடந்த திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

காரைநகர் அபிவிருத்திச் செயலர் ஜெ.தில்லையம்பலவாணரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்டடத் தொகுதியில் அமைந்த நோயாளரை பார்வையிடும் கிளினிக் அறையை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட காரைநகர் பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன் சம்பிரதாயமாகத் திறந்துவைத்தார்.

அக்கட்டடத் தொகுதியில் அமைந்த ஈ.சீ.ஜீ. கூடத்தினை பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த எஸ்.தேவநேசனும், வைத்திய அதிகாரி தங்கும் அறையினை வைத்திய கலாநிதி ப.ஜெயக்குமாரும், ஆய்வுகூடத்தினையும் பெயர்ப்பலகையினையும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் கணக்காளர் ரி.தனரஞ்சனராஜனும் திறந்து வைத்தனர். (க-246)

# கச்சதீவை திரும்ப பெறக்கோரி மதுரையில் "புதிய தமிழகம்" ஊர்வலம்

கச்சதீவை திரும்பப் பெறக்கோரி புதிய தமிழகம் கட்சி சார்பில் மதுரையில் நாளை மறுதினம் சனிக்கிழமை ஊர்வலம் நடாத்தப்படும் என்று புதிய தமிழகம் கட்சியின் நிறுவுனர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மதுரை சென்ற டாக்டர் கிருஷ்ணசாமி அங்கு ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது,

இலங்கையில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பிரச்சினை நடந்துவருகிறது. ஆனால் இலங்கையிலிருந்து தமிழர்கள் தமிழகத்திற்கு அகதிகளாக வரும் போதுதான் மத்திய மாநில அரசுகளின் கவனம் இலங்கையின் பக்கம் போகிறது.

தற்போது இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி பேசித் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன்சிங் கூறியிருப்பதை வரவேற்கிறேன்.

இலங்கை அரசை சம்மதிக்க வைக்க சர்வதேச அமைப்புக்களையும் இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகாண வேண்டும். இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட கச்சதீவை நாம் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்.

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி புதிய தமிழகம் கட்சி சார்பில் மதுரையில் நாளை மறுதினம் சனிக்கிழமை ஊர்வலம் நடத்தப்படவுள்ளது.

ஊர்வலம் மதுரை ராஜா முத்தையா மன்றம் அருகில் இருந்து புறப்பட்டு தமுக்கம் மைதானத்தில் முடிவடையும்.

அங்கு பொதுக்கூட்டமும் நடைபெறும். இதில் பல்வேறு கட்சியினரும் கலந்து கொள்ளவேண்டும் என அழைத்துள்ளோம் என்றார்.

(க-7)

# குற்றச்செயலில் ஈடுபட்ட முஸ்லிம் இளைஞர் கைது?

(கொழும்பு)

ஒருங்கிணைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவொன்றின் தலைவரான முஸ்லிம் இளைஞர் ஒருவர் ரி-56 ரக தன்னியக்க துப்பாக்கியொன்று, மகசின்கள் இரண்டு, ரவைகள் 50 ஆகியவற்றுடன் அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபரிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து மேற்படி ஒருங்கிணைக்கப்பட்ட குற்றச் செயல்களிலீடுபடும் கோஷ்டியை சேர்ந்த முஸ்லிம், தமிழ் இளைஞர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அக்கரைப்பற்று பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.


ஒருங்கிணைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் கோஷ்டி தலைவரான மேற்படி நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதில் முஸ்லிம் இருவரின் கொலை, கொள்ளைச் சம்பவம் பலவற்றின் விபரங்கள் தெரியவந்துள்ளன.

மேற்படி சந்தேக நபர் பயங்கரவாத குழுவினருடன் தொடர்பானவரா என்பது பற்றிய விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-7)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 12

முருக-தனுஷ்கோடி



இரண்டு தொகுதிக்கு மூன்று வேட்பாளர்கள்! தலைவர் காமராஜும் மாணிக்கமும் வெற்றி பெற்றார்கள். வெற்றி ஊர்வலம் விருதுநகரில் நடைபெற்றது. இரட்டைக் குதிரைச் சாரட்டில் தலைவர் காமராஜ் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார் .முன்னும் பின்னும் மக்கள் கூட்டம் விருதுநகருக்கு பெருமை சேர்த்த ஊர் வலங்களில் அதுவும் ஒன்று.

விருதுநகருக்கு அழகூட்டுவது தெப்பக்குளம் அதைச் சுற்றி வளைவு சுவர்கள் நான்கு பக்கமும் அழகிய படிகள் நடுவில் மண்டபம் அந்தத் தெப்பக்குளத்தின் கம்பீரத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்! அது மட்டுமா? தெப்பக்குளத்தைச் சுற்றி நாலா புறமும் கடைகளும் உண்டு.

அந்தத் தெப்பக்குளத்தின் கீழ்ப்பக்கத்தில் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. அப்போது காமராஜ் அமர்ந்திருந் சாரட்மீது அக்கினித் திராவகம் வீசப்பட்டது. பல் புகளில் அடைக்கப்பட்டு அவை பறந்து வந்தன. நல்ல வேளை அக்கினித் திராவகம் காம ராஜ் மீது படவில்லை. அக்கினித்திராவகம் அடங்கிய பல்புகள் குதிரைகளுக்கு முன்னால் விழுந்து உடைந் தன. குதிரைகள் மிரண்டு ஓட ஆரம்பித்தன. பக்கத்தில் வந்தவர்கள் பக்குவமாகக் குதி ரைகளை அடக்கினார்கள்.

கிராமத்து மக்கள் கொதித்தெழுந்தனர். அக்கினித் திராவகம் எந்தத் திசையிலிருந்து வந்ததோ அங்கு அவர்கள் பாய்ந்தனர். அவர்கள் கொண்டுவந்த கொடியின் கம்புதான் அவர்களுக்கு ஆயுதம் திராவகம் வீசிய நச்சுப் பாம்புகளை நாட்டுத் துரோகிகளை அவர்கள் விரட்டி அடித்தனர்.

பின்னர் ஊர்வலம் ஆவேசத்துடன் தேசபந்து மைதானத்தை அடைந்தது.

*ராஜாஜி விரித்த வலையும் காமராஜின் ஏமாற்றமும்*

இந்தத் தேர்தலில் சட்ட சபைத் தொகுதி ஒன்றில் சத்தியமூர்த்தி போட்டியிட்டு வெற்றிபெற்று, அவரே மந்திரி சபையையும் அமைப்பார் எனக் காமராஜ் எண்ணினார் . ஆனால் கடைசி நேரத்தில் ராஜாஜி புகுந்து விட்டதால் இதற்குச் சாத்தியம் இல்லாமல் போய் விட்டது. பல்கலைக்கழகப் பட்ட தாரிகள் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெவேண்டுமெனச் சத்தியமூர்த்தி எண்ணினார். இந்தத் தொகுதியை ராஜாஜிக்கு விட்டுக்கொடுக்கும்படி இந்து ஸ்ரீனிவாசன் போன்ற நண்பர்கள் கூறவே பெரிய மனதுள்ள சத்தியமூர்த்தி விட்டுக்கொடுத்துவிட்டார். மத்திய சட்டசபையில் சத்தியமூர்த்தியின் நாவன்மையும் சாமர்த்தியமும் எதிரிகளைத் திணற அடித்திருந்தன . ஆகவே அவர் அங்கேயே உறுப்பினராக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால் சத்தியமூர்த்திக்கு ஓர் உறுதிமொழி தரப்பட்டது. சென்னையில் மந்திரிசபை அமைக்கும் பட்சத்தில் அவர் அதில் சேர்த்துக்கொள்ளப்படுவார் என்பதுதான் அது.

மந்திரி சபை அமைக்கப்படுவதற்கு முன்னதாகச் சத்தியமூர்த்தி டெல்லி புறப்பட்டார். புறப்படு முன் ராஜாஜியைச் சந்தித்தார். கவுன்சிலுக்கு நீங்கள் நியமிக்கப்பட்டு மந்திரி சபையில் சேர்க்கப்படுவீர்கள் என்று ராஜாஜி அப்போது சத்தியமூர்த்தியிடம் கூறினார். ஆகவே சட்டசபைத் தொகுதிக்கு நீங்கள் போட்டியிடத் தேவையில்லை என்றும் சத்தியமூர்த்தியிடம் ராஜாஜி கூறினார்.

டெல்லி போகும் முன்பு பம்பாயில் சர்தார் படேலைச் சத்தியமூர்த்தி சந்தித்தார். சத்தியமூர்த்தியிடம் படேல் அப்போது ஒரு தகவலைக்கூறினார். சென்னையில் ராஜாஜி தலைமையில் மந்திரிசபை சத்தியமூர்த்தி இல்லாமல் அமைக்கப்பட்டு விட்டது. கவுன்சிலுக்கு டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன் நியமனம் செய்யப்பட்டு மந்திரியாக ஆக்கப்பட்டு விட்டார் என்பதே அந்தக் தகவல். ராஜாஜி அளித்த உறுதி மொழியைப் படேலிடம் கூறித் தான் ஏமாற்றப்பட்டு விட்டதை விளக்கினார் சத்தியமூர்த்தி .இதைவிடப் பெரிய ஏமாற்றம் அடைந்தது காமராஜ்தான் .தனது அரசியல் குருவைப் பழிவாங்கி விட்டார்கள் என்றே காமராஜ் கருதினார்.

சத்தியமூர்த்தி பொதுக்கூட்டங்களில் பேசும் போது ஒன்றை வலியுறுத்திப் பேசுவார். எந்தப் பொலிஸ்காரர்கள் காங்கிரஸ்காரர்களைத் தடியால் அடித்தார்களோ அதே பொலிஸ்காரர்களைக் கதர்க்குல் லாய்க்குச் சலாம் போடும்படி வைக்கிறேன் என்று சத்தியமூர்த்தி அப்போது அடித்துப் பேசுவார் . அந் தச் சத்தியமூர்த்தியை மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளாதது காமராஜுக்கு வருத்தத்தை அளித் தது. தடிகொண்டு தாக்கிய அதே பொலிஸார் காங்கிரஸ் மந்திரிகளுக்குச் சலாம் போட்டனர் அந்தக் கௌரவம் சத்தியமூர்த்திக்குக் கிடைக்காதபடி ராஜாஜி செய்துவிட்டார்.

## 05. சரித்திர மாற்றம்

*தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் மாற்றம்*

அந்த ஆண்டுத் தமிழ்நாடு காங்கிரஸ் கூட்டம் வத்தலக்குண்டில் நடைபெற்றது. முத்துரங்க முதலியார் வெற்றிக்கு காமராஜ் விசேஷ முயற்சி எடுத்துக்கொண்டார்.

அடுத்து விருதுநகரில் முனிசிபல் தேர்தல் நடந்தது. மொத்தம் உள்ள 24 வார்டுகளிலும் காங்கிரஸ் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 22 வார்டுகளில் காங்கிரஸ் வெற்றிபெற்றது. தலைவர் கமராஸ் 7ஆவது வார்டில் இருந்தும் நான் 19ஆவது வார்டில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டோம் 21 கவுசிலர்களும் காமராஜையே முனிசிபல் தலைவராக (சேர்மன்) இருக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள் அவர் மறுத்து விட்டார். சேர்மனாக வருபவர் உள்ளூரிலேயே இருந்து பொது வேலையைக் கவனிப்பவராக இருக்கவேண்டும் நான் அடிக்கடி வெளியூர் போகக்கூடியவன் என்னை விட்டுவிடுங்கள் என்று கூறிக்காமராஜ் மறுத்துவிட்டார். பின்னர் சங்கரபாண்டிய நாடார் சேர்மன் ஆனார்.

1939-ல் தலைவர் காமராஜ் கட்டளைப்படி நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் தேர்தலுக்கு வேட்பாளராக நின்றேன் என்னை எதிர்த்துச் சுப்பிரமணிய நாடார் போட்டியிட்டார்.

என்னுடைய வெற்றிக்காக 6 வார்டுகளில் பிரச்சாரம் செய்யும் பொறுப்பையும் ;தேர்தல் அன்று ஓட்டர்களை அழைத்துவந்து ஓட்டளிக்க வைக்கும் பொறுப்பையும் முத்துசாமி ஒப்புக்கொண்டிருந்தார். இதற்கிடையில் நண்பர் முத்துசாமிக்கும் காமராஜுக்கும் ஏதோ அபிப்பிராயபேதம் ஏற்பட்டது. அதை இந்தத் தேர்தல் மூலம் தீர்த்துக்கொள்ள எண்ணிய முத்துசாமி என்னிடம் வந்தார். உன்னுடைய தேர்தல் வேலைகளை நான் கவனிக்க வேண்டுமானால் காமராஜ் வந்து என்னிடம் கூற வேண்டும் என முத்துசாமி என்னிடம் தெரிவித்தார். நான் தலைவரிடம் ஓடினேன். விஷயத்தைச் சொன்னேன் நீ தோற்றாலும் பரவாயில்லை நான் முத்துசாமியிடம் எதுவும் கூறமாட்டேன் என்று காமராஜ் கூறி விட்டார்.

அடுத்த நாள் தேர்தல்!ஓட்டுச்சாவடியில் வைக்க வேண்டிய ஓட்டுப்பெட்டி தேர்தல் விதிப்படி காலை 7 மணிக்கே வந்துவிட வேண்டும் ஆனால் 8மணியாகியும் பெட்டி ஓட்டுச்சாவிடிக்கு வரவில்லை நொண்டி மாட்டுக்குச் சறுக்கியது சாக்கு என்பார்கள் அதுபோலத் ,தேர்தல் அதிகாரி திருநெல்வேலி மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் என் ஆட்சேபத்தை தெரிவித்தேன். விதிப்படி பெட்டி 7மணிக்கு வர வேண்டும் 8மணியாகியும் வரவில்லை. இதனால் எனக்கு விழும் ஓட்டுக்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றேன் என் ஆட்சேபத்தைச் சிறிது நேரத்தில் எழுதித் தருவதாகவும் கூறினேன். (தொடரும்)

## இராணுவ உயரதிகாரிகளின் பாதுகாப்பு குறித்து அரசு அக்கறை காட்ட வேண்டும்

(கொழும்பு)

இராணுவத்தின் உயரதிகாரிகள் பலர் நாட்டில் இல்லாத நிலையில் நாட்டின் தற்போதைய நிலைமையில் அவர்களின் சேவையைப் பெறமுடியாமல்உள்ளமைதொடர்பாக ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் என்று ஐ.தே.க கோரியுள்ளது.

இராணுவ உயரதிகாரிகளின் பாதுகாப்பு தொடர்பாக அரசு அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இராணுவத்தளபதி சரத் பொன்சேகா சிகிச்சைக்காக வெளிநாடு சென்றுள்ளார். ஓய்வுபெற்றிருந்த தலைமை அதிகாரி தற்காலிகமாக சேவையில் இணைக்கப்பட்டுள்ளார். பிரதி தலைமை அதிகாரி கொலை செய்யப்பட்டுள்ளார் புலனாய்வுத் துறை அதிகாரி வெளிநாடு சென்றுள் ளார்.

இவ்வாறு இராணுவத் தலைமையகம் இருக்கின்ற நிலையில் நிலைமையைமேலும்மோசமாக்கும்வகையில் பாதுகாப்புச் செயலாளரும் வெளிநாடு சென்றுள்ளார்.

மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க கொலை செய்யப்பட்ட நிலையில் நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப் பட வேண்டிய நேரத்தில் பல்வேறு இராணுவ உயரதிகாரிகளின் சேவையைப் பெற முடியாமல் இருக்கின்றமை தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றுள்ளது.(கு)

## பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் இடம்பெயர்வு !

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக தாழ் பிரதேசங்களில் வாழும் மக்கள்பாதுகாப்பான இடங்க ளுக்கு இடம்பெயர்ந்து வருகின்ற னர்.

இதேவேளை, இரத்தின புரி யில் மண்சரிவு ஏற்படலாமென இனங்காணப்பட்டுள்ள 500ற்கும் மேற்பட்ட இடங்களிலுள்ள பொது மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுகங்கையின் நீர்மட்டம் ஓரளவு குறைந்துள்ள போதிலும் இம் மழை தொடரும் பட்சத்தில் வெள்ளம் ஏற்படவாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாக இருப்பினும் இயற்கை அனர்த்தம் ஏற்படுமிடத்து அதற்கு முகம் கொடுக்கக்கூடிய அளவில் அனைத்து ஏற்பாடுகளை செய்து வைத்துள்ளதாக மாவட்ட செயலாளர் மாலனி பிரேமரத்ன அறிவித்துள்ள அதேவேளை, நேற்று முதல் அமுலுக்கு வரும் விதத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் அவசரகால நிலைமையும் பிரகடனப்படுத்தப் பட்டுள் ளது.

இப் பகுதியில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக போக்குவரத்து உட்பட பொதுமக்களின் நாளாந்த செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

(கு-7)

## நாடு அபிவிருத்தி அடையவேண்டுமானால் ஒழுக்கம் கடைப்பிடிக்க வேண்டுமாம்

### பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானால் ஒழுக்கம் கடைப் பிடிக்கப்படுவது அத்தியாவசியமானது என்று பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒழுக்கமில்லாத சமூகத்தைக் கொண்டு அபிவிருத்தியை நோக்கி முன்னேற முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஒரு மனிதனது அபிவிருத்தியானாலும் சரி நாட்டின் அபிவிருத்தியானாலும் சரி அந்த அபிவிருத்தியை மேற்கொள்ள ஒழுக்கம் அவசியம் என்று சுட்டிக்காட்டியுள்ள அவர் , ஒழுக்க சீலர்களை உருவாக்குவது தற்போது தேவையாகவுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்த நாட்டில் பண்பு மிக்க பிரஜைகளை உருவாக்க வேண்டும். நல்லது, கெட்டது ஆகியவற்றை புரிந்து கொள்ளக்கூடி பிரஜைகளைஉருவாக்கவேண்டுமென அவர் மேலும்தெரிவித்துள்ளார்.(கு-9)

## திருடப்பட்ட கதவுகளை பொலிஸார் கைப்பற்றினர்

(காரைநகர்)

காரைநகரில் இருந்து களவாடப்பட்ட கதவுகள் சில பொன்னாலையில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் வைக்கப் பட்டுள் ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது கடந்த வாரம் உழவு இயந்திரத்தில் கிடுகுகள் ஏற்றப் பட்டு அதற்கு கிழே 12 கதவுகள் மறைத்து வைக்கப்பட்டு காரைநகரில் இருந்து பொன்னாலை வழியாக சட்ட விரோதமாக கடத்தப்பட்டது.

பொன்னாலை சந்தியில் கடமையில் இருந்த பொ்லிஸார் குறித்த உழவு இயந்திரத்தை தடுத்து பரிசோதனை செய்த போது கதவுகள் கடத்தப்படுவது தெரியவந் தது.

இச்சசம்பத்துடன் தொடர் புடைய நபர்களை விசாரணை செய்த போது சந்தேகம் கொண்ட பொலிஸார், மேலதிக விசாரணைக்காக குறித்த உழவு இயந்திரத்தினை வட்டுக் கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கதவுகள் அனைத்தும் தங்கோரை கிராமத்தில் களவாக கழற்றப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது. கதவுகளை களவு கொடுத்த பொது மக்கள்பொலிஸ்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள கதவுகளை பார்வையிட்டு வருகின்றனர். (கு-246)

## இளம் பெண்களுக்கான சுயதொழில் திட்டம்!

வலிகாமம் வடக்கு இடம் பெயர்ந்தோர் நலன் புரி நிலையங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் கோப்பாயில் இளம் பெண்களுக்கான சுயதொழில்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அரசிமா, மிள காய்த் தூள், போன்ற வற்றினைத் தயாரித்து பொதி செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

இத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான நிதி யுதவிகயை யாழ்ப்பாணத்திலுள்ள மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு வழங்கியுள்ளதாக சமாசத்தின் தலைவர் இ. கணேசன் தெரிவித்துள்ளார். (கு-16)



அமெரிக்காவில் உள்ள டெக்சாசில் மிஸ். டெக்சாஸ் அமெரிக்கா 2006 ஆக மேகன் எலிஸ் தேர்வு செய்யப்பட்டார்

# பாக். இராணுவ முகாம் மீது கார்க்குண்டுத் தாக்குதல்

பாகிஸ்தானில் வாசிஸ்தான் மலைப் பகுதியில் தீவிரவாதிகள் முகாம் அமைத்து பயிற்சி பெற்று வருகிறார்கள். ஆப்கானிஸ்தான் எல்லையை ஓட்டியுள்ள பகுதி இது. தலிபான் தீவிரவாதிகளும் அல்குவைதா தீவிரவாதிகளும் கூட்டாக இங்கு முகாம் அமைத்து வன்முறை சம்பவங்களை அரங்கேற்றி வருகிறார்கள்.

இந்த நிலையில் தீவிரவாதிகளின் முகாம்கள் மீது அமெரிக்க கூட்டு படை யும் பாகிஸ்தான் படையும் சரமாரியாகக் குண்டு வீசியது. இதில் ஏராளமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்களது முகாம்கள் அழிக்கப்பட்டன.

தாக்குதல் நடத்திய பாகிஸ்தான் இராணுவத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தீவிரவாதிகள் கடந்த திங்கட்கிழமை வாசிஸ்தான் அருகே மிரான்ஷா பகுதியில் அதிரடித்தாக்குதல் நடத்தினர். அங்கு அமைக்கப்பட்ட இராணுவ முகாம் மற்றும் சோதனைசாவடி நோக்கி வெடி குண்டுகளை நிரப்பிய ஒரு கார் வேகமாக சென்றது. தற்கொலை படை தீவிரவாதிகள் அந்த காரை இராணுவ முகாம் மீது மோதச் செய்தனர். இதில் அந்த கார் பயங்கரமாக வெடித்தது இராணுவ முகாமில் வெடித்து தீப்பிடித்தது.

இதில் உயர் இராணுவ அதிகாரிகள் உடல் சிதறி பலியானார்கள். மேலும் 10 இராணுவத்தினர் காயம் அடைந்தனர். பாகிஸ்தான் இராணுவத்தையும், அமெரிக்கா இராணுவத்தையும் பழிவாங்க இதேபோன்ற தாக்குதல்கள் தொடரும் என்றும் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (து)

# வாஷிங்டனில் பலத்த மழை ரயில் போக்குவரத்து பாதிப்பு

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் பெய்துவரும் பலத்த மழையால் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. முக்கிய அரசு அலுவலகங்கள் மூடிக்கிடக்கின்றன. பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. வெள்ளை மாளிகை அருகே இருந்த நூற்றாண்டு பழமை வாய்ந்த மரம் வேருடன் சாய்ந்தது.

அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதியில் நிலவும் பருவநிலை காரணமாக அங்கு கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. கடந்த ஞாயிறு முதல் மறுநாள் திங்கட்கிழமை வரை 18 செ.மீ. மழைபெய்துள்ளது. இதனால்நகரின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளக் காடாக காட்சி அளிக்கின்றன. உள் நாட்டு வருவாய் அலுவலகம், வர்த்தக அலுவலகம் மற்றும் நீதி மன்றம் ஆகியவை செயல்படவில்லை.

தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழை காரணமாக ஏராளமான தொழிலாளர்கள் பணிக்கு வரவில்லை என்றும் இத னால் நிவாரண பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

வாஷிங்டன் நியூயோர்க் இடையே செல்லும் ஏழு பயணிகள் ரயில் ரத்து செய்யப்பட் டுள்ளது. நெடுஞ்சாலைகளில் சேறும் சகதியும் கலந்திருப்பதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. தேசிய ஆவண காப்பகத்திற்கும் மழையால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வாஷிங்டன் விமானநிலையத்திலிருந்து புறப்படவேண்டிய விமானங்கள் இரண்டு மணி நேரம் தாமதமாக கிளம்பிச் சென்றன. நியூயோர்க் விமான நிலையத்திலும் விமான புறப்பாடுகள் தாமதமாயின. வெர்ஜினியா கொலம்பியா ஆகிய இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. (து)

# குறைந்து செல்லும் மக்கள்தொகை ரஷ்ய நாட்டு அதிபர் கவலை!

ரஷ்யாவில் மக்கள் தொகை வேகமாக குறைந்து வருகிறது. 1993ஆம் ஆண்டுக்குப்பிறகு மக்கள் தொகையில் 11இலட்சம் குறைந்துள்ளது. எனவே ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளில் வசிக்கும் ரஷ்யர்கள் நாடு திரும்ப வேண்டும் என்று ரஷ்ய அதிபர் புடின் கேட்டுக்கொண்டுள்ளார்.

ரஷ்யாவின் மக்கள் தொகை 14கோடியே 30 இலட்சம்ஆகும். 1993ஆம்ஆண்டுமுதல் மக்கள் தொகை எண்ணிக்கை குறைந்து வருகிறது. இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது. பிறப்பு விகிதம் குறைவாகவுள்ளது. இந்த நிலை நீடித்தால் இந்த நூற்றாண்டின் மத்தியில் மக்கள் தொகை 10கோடியாக குறைந்து விடும். இது அதிபர் புடினுக்கு கவலையை அளித்துள்ளது. இதுகுறித்து அவர் ரஷ்யாவின் அதிகாரபூர்வமான இணையத்தளத்தில் ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்.

நாம் இப்போது மிக நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறோம். மக்கள் தொகை குறைந்துவரும் பிரச்சினை நாட்டின் பாதுகாப்புக்கான ஆபத்தாகும். எனவே ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளில் வசிக்கும் ரஷ்யர்கள் தாய்நாட்டுக்கு திரும்பி வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி வருகிறவர்களுக்கு நிதி உதவியும், சமூக உதவியும் அளிக்கப்படும். அவர்களை குடியமமர்த்துவதற்காக கமிஷன் ஒன்று அமைக்கப்படும் என்று அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (து)

# ஆயுதங்களை ஒப்படைக்க மாவோயிஸ்டுகள் மறுப்பு

ஐ.நா.சபை கண்காணிப்பின் கீழ் ஆயுதங்களை எங்கள் வசமே வைத்துக் கொள்ள விரும்புகிறோம். இப்போதைக்கு ஆயுதங்களை ஒப்படைக்க தயாராக இல்லை என்று நேபாள மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

நேபாளத்தில் இடைக்கால அரசு அமைப்பதற்கான நடைமுறைகள் தொடங்கியுள்ளன. சமீபத்தில் பேட்டியளித்த நேபாள உள்துறை அமைச்சர் இடைக்கால அரசில் மாவோயிஸ்ட்கள் பங்கேற்க வேண்டும் எனில் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என நிபந்தனை விதித்தார்.

இந்நிலையில், மாவோயிஸ்ட் தீவிரவாத தலைவர் பிரசந்தாவும், மற்றொரு முக்கிய தலைவரான பாபுராம் பட்டாரையும் ஏழு கட்சி கூட்டணியின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது ஐ.நா.சபையின் கண்காணிப்பின் கீழ் ஆயுதங்களை தங்கள் வசம் வைத்துக்கொள்ள விரும்புவதாகவும் தற்போதைய சூழ்நிலையில் ஆயுதங்களை ஒப்படைக்க தயாராக இல்லை என்றும் திட்டவட்டதாகத் தெரிவித்தனர்.

அதற்கு சம்மதம் தெரிவித்த ஏழு கட்சி கூட்ணியினர் மாவோயிட்ஸ்டுகள் மக்களிடமிருந்து வலுக்கட்டாயமாக பறித்த சொத்துக்கள் அனைத்தையும் அரசிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என புதிய நிபந்தனை விதித்தனர்.

இதைத் தொடர்ந்து நேபாள காங்கிரஸ் (ஜனநாயக) தலைவரும் முன்னாள் பிரதமருமான ஷெர் பகதூர் துபாவை அவரது இல்லத்தில் பிரசந்தா நேற்று முன்தின் சந்தித்து பேசினார். அந்த சந்திப்பின் போது இடைக்கால அரசை அமைப்பது குறித்தும் அரசியல் நிர்ணய சபைக்கு தேர்தல் நடத்துவது குறித்தும் அவர்கள் இருவரும் விவாதித்தனர்.

அது த மட்டுமன்றி அரசுக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட எட்டு அம்ச ஒப்பந்தம் குறித்து ஏழு கட்சி கூட்டணியில் கருத்து வேறுபாடு நிலவுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. (து)

WORLD NEWS உலக தரிசனம்

# காஷ்மீர், பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நேரம் நெருங்கிவிட்டது- பாக். பிரதமர்

இந்தியாவுடன் காஷ்மீர் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நேரம் வந்துவிட்டது என்று பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸ் கூறினார். இந்தியாவுடன் சகஜ உறவை ஏற்படுத்துவதற்கான அமைதி முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் வெளிநாட்டுத் தூதர்களுடன் வெளியுறவுக் கொள்கை குறித்து விவாதிக்கும் மாநாடு இஸ்லாமாபாத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகிறது. இந்தியா உள்ளிட்ட 28 நாடுகளின் தூதர்கள் இதில் பங்கேற்றனர். இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உலகில் உள்ள அனைத்து வல்லரசுகளுடனும் நல்லுறவை பராமரிப்பதிலும், உறவை வலுப்படுத்துவதிலும் பாகிஸ்தான் ஆர்வம் கொண்டுள்ளது. அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டுள்ள அதேசமயத்தில் சீனாவுடனும் பாகிஸ்தான் உறவை மேம்படுத்தி வருகிறது. இதேபோல ஐரோப்பிய யூனியன், ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடனும் உறவை வளர்த்துக்கொண்டுள்ளது என்று பிரதமர் அஜீஸ் தனது உரையில் தெரிவித்துள்ளார். (து)

## ஈராக்கில் உள்ள


# அமெரிக்கப் படைகளை குறைக்க ஆலோசனை

(வாஷிங்டன்)

ஈராக்கில் அடுத்த ஆண்டு இறுதிக்குள் அமெரிக்கப்படைகளின் எண்ணிக்கையை ஓரளவுக்கு குறைக்கும் உத்தேசத் திட்டம் குறித்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஈராக்கில் தற்போது 1,30000 அமெரிக்க வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் ஒரு பகுதியினரை அமெரிக்காவுக்கு திரும்ப அழைத்துக் கொள்ள திட்டமிட்டு வருவதாக அமெரிக்க இராணுவ தளபதிகளில் ஒருவரான ஜோர்ஜ் கேசே தெரிவித்திருந்தார்.

இதை அமெரிக்க அதிபர் மாளிகை வட்டாரங்கள் கடந்த திங்கட்கிழமை உறுதிப்படுத்தின. எனினும் அவசரமாக அமெரிக்கப்படைகளை வாபஸ் பெறும் உத்தேசமில்லை. ஈராக் இராணுவத்தினர் ஸ்திரத்தன்மையுடன் உள்நாட்டு பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்படும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (து)



அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் கடந்த சில நாட்களாக தொடர் மழை மற்றும் புயல்காற்று வீசி வருகிறது. இதில், அதிபரின் வெள்ளை மாளிகை முன் இருந்த 120 ஆண்டுகள் பழமை வாய்ந்த மரம் வேரோடு சாய்ந்து விட்டது.

முன் எப்பொழுதையும் விட உலகம் இப்போது நெருங்கிய பிணைப்புக்கொண்டிருக்கிறது. சட்ட நியாயத்தின்படி தகராறுகள் தீர்வதை. நாம் உறுதி செய்யவேண்டும். -டாக்டர் இராதாகிருஷ்ணன்.

வலம்புரி

# இந்தியாவின் பங்களிப்பு இலங்கையில் தேவையானது

இலங்கையில் மீண்டுமொரு பாரிய யுத்தம் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் தோல்வி கண்டு விட்டன. யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பணியும் எதிர்காலத்தில் சக்தியற்றதாகவே இருக்கப்போகின்றது.

இவை அனைத்தும் இலங்கைத்தீவில் மீண்டும் பாரிய ஒரு யுத்தத்தை ஏற்படுத்தப்போவதை பறைசாற்றி நிற்கின்றன.

பேரழிவை தரக்கூடிய யுத்தத்தை இலங்கையில் தவிர்ப்பதாயின் அதற்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு வழி இலங்கைப்பிரச்சினையில் இந்தியா தலையிடுவதாகும்.

இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டாலும் இலங்கையில் வெடிக்கவிருக்கும் யுத்தத்தையும் தடுக்க முடியாது என்பது உறுதி.

நோர்வேயைப் பொறுத்தவரை அந்நாடு சமாதான அனுசரணைப்பணியை மட்டுமே வழங்கும். அதில் இலக்கை அடைய முடியாவிட்டால் அப் பணியில் இருந்து நோர்வே விலகிக்கொள்ளும்.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கைக்கு மிக நெருக்கமான அண்டைநாடாக அது இருக்கிறது.

அத்துடன் இந்தியாவின் எல்லைகளை -அதன் ஆதிக்கத்தை மீறி எந்நாடும் இலங்கைப்பிரச்சினையில் தலையிட முடியாது.

எனவே இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதாயின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதாயின் அதற்கு இந்தியாவின் பங்களிப்பும் தலையீடும் மிகவும் இன்றியமையாததாகும்.

எனினும் கடந்த கால நிகழ்வுகள் இலங்கை மீதான இந்தியாவின் நேரடித்தலையீட்டை தடை செய்வதாக அமைந்துள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தபோது இந்தியாவின் தலையீட்டை அவர் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டார்.

இதனால் இந்திய அமைதிப்படை ஈழத்தமிழர்களுக்கு எதிராக செயற்படலாயிற்று.

இலங்கை இராணுவத்தால் பாதிப்படைந்த ஈழத்தமிழர்கள் மீது இந்திய அமைதிப்படையும் தாக்குதல் நடத்தியமை வேதனைக்குரிய சம்பவமாகும்.

இத்தகைய நிகழ்வுகள் அரசியல் புலத்தில் துரதிஷ்ட வசமானதாகும். இவ்வாறான துரதிஷ்ட சம்பவங்கள் நடந்து விட்டதென்பதற்காக இந்தியா தனது தார்மீகக்கடமைகளில் இருந்து விலகிவிட முடியாது.

இதனையே தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் யுத்தம் என்றதும் ஈழத்தமிழர்கள் தம்மைப்பாதுகாப்பதற்காக தமிழகத்திற்குச் செல்கிறார்கள். இதிலிருந்து இந்தியா ஈழத்தமிழர் விடயத்தில் தனக்கு இருக்கக்கூடிய பொறுப்பை உணர்ந்துகொள்ளும்.

எனவே பழையன கழிந்துபோக, மறந்து போக மீண்டுமோர் யுத்தம் இலங்கையில் ஏற்படுவதைத் தடுக்க- அதனால் நிகழக்கூடிய மனித அழிவுகளைத்தவிர்க்க இந்தியா இலங்கைப்பிரச்சினையில் தலையிட்டாக வேண்டும்.

# சமூக சேவையாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும்!

## வடமராட்சி வலயக் கல்வி பிரதிப் பணிப்பாளர் எம். ஸ்ரீபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போர்சூழல் நிறைந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் மூலம் துன்பப்பட்ட மக்களுக்கு மனித நேயப் பணிகளை அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் ஆற்றியவகையில் மாவட்ட இணைப்பாளராகப் பணிபுரிந்த இ.பகீரதன் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார். இவரது மனிதநேயப் பணிகளரல் மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பானது நல்ல ஆக்கபூர்வமான சேவைகளை ஆற்றியுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட சமூக மேம்பாட்டுக் குழுவின் தலைவரும் வடமராட்சி கல்வி வலயத்தின் பிரதிப் பணிப்பாளருமான எம் .ஸ்ரீபதி யாழ்ப்பாணம் கோவில் வீதியில் நடாத்தப்பட்ட மாவட்ட இணைப்பாளருக்கான சேவை நலன் பாராட்டு விழாவில் தலைமையுரை ஆற்றும்போது குறிப்பிட்டார்.

மாவட்ட சமூக மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகளும் பங்கு கொண்டிருந்த இவ் விழாவில் தலைவர் எம். ஸ்ரீபதி தொடர்ந்து உரையாற்றும் போது,

சமுதாயத்துக்கு தன்னலமற்ற சேவை செய்பவர்களை சேவை அமைப்புக்கள் நிச்சயமாகப் பாராட்டவேண்டும். தமிழர்களது பண்பாட்டில் புகழ் பற்றிய செய்திகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. புகழ் என்பது வெறும் வார்த்தையல்ல.

ஒருவர் தன்னை அர்ப்பணித்து சமுதாயத்துக்கு செய்யும் சேவைக்கு நாட்டு மட்டத்தில், உலக மட்டத்தில் அளிக்கப்படுகின்ற அங்கீகாரமே புகழாகும். இதனை நாம் தப்பிதமாகப் புரிந்து கொள்ளக்கூடாது. சமூக சேவையாளர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டியவர்களாவர்கள்.

ம்ாவட்ட இணைப்பாளராகப் பணியாற்றிய பகீரதன் சுனாமி அனர்த்தத்தின் போது மிக வேகமாக செயல்பட்டு சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு விதமான மனிதநேயப் பணிகளை ஆற்றியுள்ளமையை நாம் அறிவோம்.

இத்தகைய சேவையாளன் தனது பணியில் இருந்து ஓய்வு பெற்று உயர் கல்வி பெறுவதற்கு அமெரிக்காவுக்குச் செல்வதை நாம் அனைவரும் வாழ்த்துகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் ஏ.கே. சிவசுப்பிரமணியம், சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் திருமதி ஜெகதீசன், வெண்புறா நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் என்.கே. குமார், அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் உட்படபலர் உரையாற்றினர் . இ.பகீரதன் ஏற்புரை நிகழ்த்தினார்.

(க-16)

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 300 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து வருடாந்தம் சுமார் 100 வைத்தியர்கள் மருத்துவ பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறுகின்றனர்.

, ஆனால் வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்திய சாலைகளில் 300 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மருத்துவ பீடத்திலிருந்து மருத்துவ பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் வைத்தியர்கள் வடக்கு - கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் கடமை புரிய விரும்புவதில்லை என்றும் கொழும்பு, கண்டி போன்ற வைத்திய சாலைகளிலேயே கடமைபுரிய விரும்புகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இதேசமயம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகள் அண்மையில் பொது வைத்திய சாலைகளாக தரமுயர்த்தப்பட்டன. வைத்தியசாலைகளுக்கு வேண்டிய உப கரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இரு வைத்தி சாலைகளிலும் தலா 20 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்றும் இதனால் புதிய கட்டடங்கள் உபக ரணங்கள் இருந்தும் நோயாளிகள் பயன் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் சம்பந்தப்பட்ட வைத்தியசாலை வட்டா ரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

யாழ். மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் வடக்கு- கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளில் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட வைத்தியர்களே வடக்கு- கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு நியமனம் செய்யப்படுகின்றனர். அவர்களில் பெரும் தொகையானோர் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள். வடக்கு- கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் சுமார் 120 வைத்தியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் அவர்களது பதவிகளை பொறுப்பேற்க வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் அவர்களது இடமாற் றங்களையும் அமுல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் குமாரவேல்பிள்ளை தெரிவித்தார். (க-7)

# அறவழிச் சிறுவர் கழகங்கள் அங்குரார்ப்பணம் செய்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் அறவழிப் போராட்டக்குழு தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 10 கிராமங்களில் அறவழி சிறுவர் கழகங்களை அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

கனடா அபிவிருத்தி அமைப்பு மற்றும் சர்வதேச பயிற்சி மையம் ஆகிய நிறுவனங்களின் நிதி ஆதரவுடன் அமைக்கப்பட்ட இந்த சிறுவர் கழகங்களுக்கு அறவழிப் போராட்டக் குழு சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்தும் திட்டங் களை அமுல் செய்துவருகின்றது என திட்ட இணைப்பாளர் வடிவேல் சிவாகரன் தெரிவித்துள்ளார்.

நுணாவில் மேற்கு, கைதடி நுணாவில்; கைதடி மத்தி, தவசிக்குளம், தாவளை, இயற்றாளை, மந்துவில்வடக்கு, கெற்பலி, விடத்தல்பளை, மட்டுவில்கிழக்கு, நாவற்குழி கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே சிறுவர் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் திட்ட இணைப்பாளர் குறிப்பிட்டார்.

இக் கழக உறுப்பினர்களுக்கு வாராந்தச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

# சண்டிலிப்பாய் பிரதேச மக்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை?

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு- கிழக் கில் ஆயிரம் வீடமைப்பு புனர மைப்பு த் திட்டத்தின் கீழ் யாழ். குடா நாட்டில் வீடுகள் அமைப்பதற்காக பயனாளிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டு அவர்களுக்கான முதற்கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாக தெரி விக்கப்பட்ட போதும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் தமக்கு கொடுப்பனவுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லையென தெரி வித்துள்ளனர்.

இப் பயனாளிகளின் கொடுப்ப னவுகள் வங்கிக்கு வந்துள்ளதாக முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டபோதும் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தடைப் பட்டிருந்த சீமெந்து, கம்பி என்பன தடையின்றி கிடைக்கின்ற போதும் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படாதுள்ளதால் மக்கள் கவலை தெரிவித் துள்ளனர். (க-132,133)

# கந்தபுராணப் படிப்பு பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடியில் கடந்த ஜனவரி மாதம் 6ஆம் திகதி முதல் நடை பெற்று வந்த கந்தபுராண படனப்படிப்பின் பூர்த்தி விழா எதிர் வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடை பெறும்.

தொடர்ந்து கந்தபுராணப் படிப்பு பூர்த்தி விழாவில் கலந்து கொள்வோருக்கு அன்னதானம் வழங்கப்படும். (க)

# புதிய பீடாதிபதி தெரிவு

யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தின் புதிய பீடாதிபதி தெரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் பயிரியல் துறைத் தலைவர் கலாநிதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் புதிய விவசாய பீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் 3 ஆண்டு காலம் இப் பதவியை வகிப்பார். (து-133)



## சாயி அருளமுதம்

அன்பின் பூரணத்திலிருந்துதா[illegible] பூரணமான ஆனந்தம் ஏற்படும். சத்யம், சமாதானம், தயை, தைரியம் இவையெல்லாம் அன்பு நிறைந்துள்ள பவனத்திலேயே செழிப்புறும் என்கிறார். சாயி நல்ல காலம், உயர்ந்த பதவி, அதிகாரம், நல்ல வாழ்க்கை ஆகியவற்றுக்காக மனிதர் ஏங்குகினறனர். ஆனால் நல்ல எண்ணங்கள், நல்ல அறிவு, நல்லொழுக்கம் ஆகியவற்றுக்காக அவர்கள் ஏங்குவதில்லை. இதைவிட வேறு என்ன சிறந்த அறிவுரையைச் சாயி வழங்க முடியும்?

# பணிப்புறக்கணிப்பை குழப்ப இராணுவத் தரப்பு முயற்சி

## மக்கள்படை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும் தாயகப் பிரதேசத்தில் அச்சமின்றி அன்றாட வாழ்க்கையையும் வலியுறுத்தக் கோரியும் நடைபெற்றுவரும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை நிறுத்துவதற்கும் குழப்புவதற்கும் படையினரும் அவர்களுடன் இயங்கும் கூலிப்படைகளும் முயற்சித்து வருகின்றன.

இது தொடர்பாக பொங்கியெழும் மக்கள் படை உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகின்றது. எனவே எந்தவித அழுத்தங்களுக்கும் அடிபணியாது பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் பூரணமாகச் செயற்படுவதன் ஊடக தொடர்ந்தும் எதிர்ப்பை படையினருக்குத் தெரியப்படுத்துவோம் என யாழ். மாவட்ட பொங்கியெழும் மக்கள்படை தெரிவித்துள்ளது.

தங்களது பாதுகாப்பிற்காக அப்பாவி மக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு மக்களை வீதிகளில் நடமாட வைப்பதற்காக இராணுவமும் ஒட்டுக்குழுக்களும் செயற்பட ஆரம்பித்துள்ளது. இதைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

வலிந்து தமிழ் மக்கள்மீது போரைத் திணிக்கவும் அப்பாவி மக்களை வகை தொகையின்றி கொன்று குவிக்கவும் திட்டமிட்ட இராணுவத்திற்கு மக்களின் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் தடையாகவிருப்பது உண்மையே.

ஒவ்வொரு பொதுமகனும்தாக்கப்படும் சந்தர்ப்பத்தில் படையினருக்கு பாரதூரமான பதிலடி கொடுக்கப்படும் என்பதை உணர்ந்து அப்பாவிப் பொதுமக்களை சீண்டுவதை நிறுத்தும்படி பொங்கியெழும் மக்கள்படை கேட்டுக் கொள்கின்றது என பொங்கியெழும் மக்கள் படை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மூன்று யுவதிகள் இராணுவத்தால் கைது

(துன்னாலை)

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் பயணம் செய்த மூன்று யுவதிகள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முள்ளி இராணுவ முகாமில் இறக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டபோது அவர்களை இராணுவத்தினர் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மூன்று யுவதிகளின் வருகைக்காகவும் காத்திருந்த பஸ் சாரதி இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் மூவரும் தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-101)

# வெளிநபர்கள் எவரும் பாடசாலைகளுக்குள் நுழைவதற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது

## கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் வெளிநபர்கள் நுழைவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அனைத்துப் பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளதாகக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

விசேட பொலிஸாரின் பாதுகாப்புப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதுடன் நடமாடும் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

சிவில் உடையில் பொலிஸாரை பாதுகாப்பில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகக் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ. தர்மராஜா தெரிவித் துள்ளார்.

இதேவேளை பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு ஸ்ரிக்கர் ஒன்றை வழங்குவதற்கும் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பெற்றோரின் பங்களிப்புடன் பாடசாலைகளின் பாதுகாப்புக் குழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. (ச-5)

# துன்னாலையில் சுற்றிவளைப்பு

(துன்னாலை)

துன்னாலைக் கிராமம் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. மந்திகைச் சந்தியிலிருந்து யார்க்கரு சந்திவரையிலும் கலிகைச்சந்தியிலிருந்து முள்ளிப்பாலம் வரையான பெருவீதிகள் முழுவதும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அப்பகுதிமக்கள் பிற்பகல் 5 மணிவரை வீடுகளுக்குள்ளே முடங்கினர். இராணுவத்தினர் பொலிஸார் சகிதம் வீடுகளுக்குச் சென்று தீவிர சோதனைகள் மேற்கொண்ட பின்னர் சந்தேகத்திற்கிடமான பலரின் அடையாள அட்டைகளை இராணுவத்தினர் எடுத்துச்சென்றனர்.

பின்னர் வல்லிபுரக் கோயிலுக்கு முன்பாகவுள்ள கொடிக்காடு இராணுவமுகாமில் வைத்து முகமூடிக்கு முன்னால் நிறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர். மேற்படி சுற்றிவளைப்பு நடவடிக்கையால் தொழில் முயற்சிகளும் பாதிக்கப்பட்டன. (ச-101)

## பட்டின சபை ஊழியரை காணவில்லையென முறைப்பாடு

பருத்தித்துறை பட்டின சபை ஊழியர் ஒருவரை காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வல்வாய் வடக்கு வல்வாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுரேஸ் (வயது 18) என்பவரே காணாமல் போனவராவார்.

இவர் கடந்த 21 ஆம் திகதி வேலைக்குச் சென்றதாகவும் இதுவரைவீடு திரும்பவில்லை எனவும் அவரது சகோதரனால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-133)

## விபத்தின்போது சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஹயஸ் மோதியதில் சிறுவன் ஒருவர் படுகாயமடைந்தார். இச் சம்பவம் நேற்று அளவெட்டியில் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அளவெட்டியைச் சேர்ந்த ராஜேஸ்வரன் ரஜீவன் (வயது-6) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார். (ச-133)

## சடலத்தைப் பொறுப்பேற்க அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ள சடலத்தை பொறுப்பேற்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

நேற்று முன்தினம் சூட்டுக் காயங்களுடன் ஒப்படைக்கப்பட்ட ஆணின் சடலத்தை எவரும் உரிமை கோரவில்லை. அவரது அடையாள அட்டையின்படி அவர் ஒழுவில் அம்பாறையைச் சேர்ந்த கனகரட்ணம் யோகராசா (வயது-38) எனத் தெரிவிக்கப்பட்டது.

அவருடன் இருந்த தற்காலிக அடையாள அட்டையின்படி சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்தவர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

# கொழும்புக்குப் பயணிப்போர்மீது ஐந்து இடங்களில் தீவிர சோதனை

(கொழும்பு)

நாட்டின் வடக்குக் கிழக்குப்பகுதிகளிலிருந்து தென்னிலங்கை செல்லும்பாதையில் ஐந்து இடங்களில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மகாஓயா மதவாச்சி, மன்னம்பிட்டிய, ததறு ஓயா, கசறட்கிட்டுவ, சியாம்பலா ஆன்டுவா ஆகிய பகுதிகளில் 24 மணிநேர சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன என இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்தவழியாகச் செல்லும் அனைத்து வாகனங்களும் தீவிர சோதனைக்குட்படுத்தப்படும். இந்தவழியாகச் செல்லும் வாகனங்களில் பயணம் செய்பவர்கள் தமது அடையாள அட்டைகளை சோதனைச் சாவடிகளில் காண்பித்துச் செல்ல வேண்டும் என்றும் பிரசாத் சமரசிங்க மேலும் கூறினார்.

அவர்கள் கொண்டு செல்லும் பொதிகளும் தீவிர சோதனைக்குட்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் க்ாணாமல் போன நால்வரில் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது. மேலும் மூவரது நிலைமை தெரியவில்லை.

குச்சவெளிப் பிரதேசம் பெரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டவர் அந்தோணி ஜோசப் என தெரிய வந்துள்ளது.

இவர் கடந்த 25 ஆம் திகதி மரம் வெட்டுவதற்காக சென்றதாக தெரியவருகின்றது. (ச-5)

## தமிழர்...

கொண்டாடுவதில்லை.

ஈழத்தமிழர் பிரச்சினைக்காக சில கட்சிகள் போராட்டம் நடத்துகின்றன. எங்கள் உணர்வை நாங்கள் ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். ஒவ்வொரு கட்சியும் அவரவர் பாணியில் செயற்படுகின்றனர் என்றார் விஜயகாந்.

(ச-5)

## புலிகளின்...

லப்பட்டுள்ளனர். மேற்படி சம்பவம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பிரதேச செயலாளரால் முறையிடப்பட்ட போதிலும் உடனடியாக அங்கு வர முடியாது என்றும் இன்று காலையே சம்பவ இடத்திற்குச் சென்று பார்க்கமுடியும் என்றும் கண்காணிப்புக்குழுவினர் நேற்று தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் சிலாபத்துறை மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன. (ச-5)

## கொழும்புப் பாடசாலைகளில்...

குண்டுப்புரளி காரணமாக பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து பாடசாலைக்குத் தேவையான பாதுகாப்பினை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

பூடசாலைகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்காக குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் அது தொடர்பான செயலமர்வுகள் மற்றும் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாடசாலைகளில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வெளியாருக்கு அனுமதி வழங்காமை, சந்தேகத் திற்கிடமான புத்தகப்பைகளை சோதனையிடல் உட்பட பல நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர். (ச-5)

## யாழ்ப்பாண...

சுரேஸ் (வயது 19) சந்தேகத்திற்குரிய வகையில் ஜூன் 27 ஆம் திகதி பிற்பகல் 2 மணியில் இருந்து காணாமல் போயுள்ளார்.

பருத்தித்துறை அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு புறப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ளார். அல்லாய் வடக்கில் உள்ள அவரது குடும்பத்தினர் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளனர். அதேபோல் ஜூன் 23 ஆம் திகதி புத்தூரில் இருந்து யாழ்.நகருக்குச்சென்ற அலிமோனி யோகேந்திரா (வயது 25) என்பவர் காணாமல் போயுள்ளதாக அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேநாளில் யாழ்.கடற்கரை வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் (வயது 19) என்பவரும் காணாமல் போனதாக அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார் என மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது. (ச-5)

## புத்தளம்-கற்பிட்டி கடற்பரப்பில்...

புத்தளம் கற்பிட்டி கடற்பிரதேசத்தில் கடற்படைத் தளம்மீது நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி விமானப்படையினரின் ஹெலி கொப்டர் மற்றும் றோடாப்படகுகள் உதவியோடு முறியடிக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் சுமார் 20 படகுகள் கடற்படைத்தளத்தை நோக்கி வருவதனைத் தமது ரோந்துப் படகுகள் அவதானித்ததையடுத்து வான் படையின் மேலதிக உதவி பெற்று இத் தாக்குதல் முடியடிக்கப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் ரி.கே.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹெலிகொப்டர்கள் வந்து தாக்குதல்கள் நடத்தத் தொடங்கியதையடுத்து விடுதலைப் புலிகள் பின்வாங்கிச் சென்றதாகவும் விடுதலைப்புலிகளின் இரண்டு படகுகள் தாக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதல் ஒரு மணி நேரம் நீடித்ததாகவும் இதன்போது மூன்று கடற்படையினர் காயமடைந்ததாகவும் இவர்கள் விமானம்மூலம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டதாகவும் தமது படகு ஒன்று சேதமடைந்துள்ளதாகவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

மன்னார் மாவட்டத்தின் தமது நிர்வாகக் கடற்பரப்பில் வழமையான கடற்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்புலிகளின் படகுஒன்றின்மீது தமிழீழ கடல் இறைமையையும் போர்நிறுத்த உடன்படிக்கையையும் மீறும் வகையில் நீர்உந்து விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

நேற்றுக் பகல் 11.15 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரம் நீடித்த கடற்சமரில் தாக்குதலை நடத்தவந்த கடற்படையின் நீர் உந்து விசைப்படகு ஒன்று சேதமாக்கப்பட்டு கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

அதிலிருந்த ஐந்து கடற்படையினர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடற்புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத ஏனைய கடற்படைப் படகுகள் சேதமடைந்த மற்றைய படகு ஒன்றையும் இழுத்துக் கொண்டு அவ்விடத்திலிருந்து பின்வாங்கிச் சென்றன.

இம் மாதத்தில் கடற்படையினர் தமிழீழக் கடற்பரப்பில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை பல வீனப்படுத்தும் பாரிய மோதல்களை ஏற்படுத்துவது இத்தோடு மூன்றாவது முறையாகும்.

இக் கடற்சமரின்போது தமிழீழக் கடற்படைப் போராளிஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். மேலும் இருவர் காயமடைந்திருக்கின்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.